சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 24 12-7-'42 Price 2 Annas





இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு ஆரோக்கியத்தைத்

தரும்

வுடவார்ட் வைத்தியனின

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

சுதேசமித்திரன் 12-7-1942

புதிய இயக்கம்

“ஜெர்மனியரோ அல்லது ஜப்பானியரோ இந்தியாவுக்கு வரவேண்டுமென்று நாம் விரும்பவில்லை. ஆயுதங்கள் கொண்டோ அன்றி ஆயுத இல்லாமலோ அவர்களை எதிர்த்து நாம் போராடுவோம்” என்று பண்டித ஜவஹர்லால் நேரு பொதுகூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

பண்டிதர் மேலும் பேசியதாவது:-பிரிட்டிஷாரைப் போலவே ஜப்பானியரும் இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிப்பதாக, இனிக்க இனிக்க ரேடியோ மூலம் பேசுகின்றனர். ஆனால் இந்தியாவுக்குச் சுயேச்சை வழங்க அவர்கள் எவருக்கும் எண்ணம் இல்லை. இதுதான் உண்மை. நிர்ப்பந்தித்தாலொழிய அவர்கள் சுயேச்சையை அளிக்கமாட்டார்கள். நிலைமை நாளுக்கு நாள் ரொம்பக் கேவலமாகி வருகிறது. ஜெர்மனியர் எகிப்துக்குள் புகுந்துவிட்டனர். ஜப்பானியரோ இந்தியாவின் எல்லைக்கு வந்து விட்டனர்.

பிரிட்டிஷாரே வலுவில் கஷ்டங்களை வரவழைத்துக் கொள்ளுகிறார்கள். இதற்காக நான் வருந்துகிறேன். அடிமைப்பட்டுக்கிடக்கும் இதர நாடுகளுக்கும் இந்தியாவுக்கும், சுயேச்சை வழங்க அவர்கள் உறுதிகொண்டாலன்றி அவர்களுடைய கஷ்டங்களுக்கு எல்லையே இராது.

யுத்தத்துக்குப் பிறகு என்ன நடக்குமென்று யாராலும் சொல்ல முடியாது. நாம் அடிமைகளாக இருக்கும் வரையில் நாட்டைப பாதுகாக்க நம்மால் முடியாது. ஆதலால்தான் பிரிட்டிஷ் சர்க்கார் இந்நாட்டிலிருந்து வெளியேறவேண்டுமென்றும் நாட்டின் பாதுகாப்பை இந்தியர் வசம் விட்டுவிட வேண்டுமென்றும் மகாத்மா காந்தி வற்புறுத்துகிறார்.

காந்திஜீ ஸத்யாக்ரஹத்தை ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறார்: அல்லது சுயேச்சையைப் பிடுங்க வேறு ஏதாவது நடவடிக்கையில் இறங்கவேண்டுமென்பதே அவருடைய யோசனை. இதற்குஜனங்கள் தங்களைத் தயார் செய்து கொள்ளவேண்டும்.

* * *

மாஜீப் பிரதம மந்திரி சிறைப்பட்டார்

பெர்ஹாம்பூரிலிருந்து வந்த ஒரு செய்தி கூறுவதாவது:—

ஒரிஸ்ஸா மாஜி பிரதம மந்திரி ஸ்ரீமான் பி. விஸ்வநாததாஸ் சென்ற மாதம் 30-ந் தேதி பகல் அவரது வீட்டில் கைதி செய்யப்பட்டார். ஆஸ்கா போலீஸ் இன்ஸ்பெக்டர் அவரை மோட்டார் பஸ்ஸில் ரஸல்குண்டா என்ற இடத்துக்கு அழைத்துச் சென்றார். ஆஸ்கா என்ற விடத்தில் அவர் ஆக்ஷேபகரமாகப் பேசியதால் பாதுகாப்புச் சட்டப்படி இந்த நடவடிக்கை

சென்றவார நிகழ்ச்சிகள்

ராஜப்பிரதிநிதி சபை விஸ்தரிப்பு

கவர்னர் ஜெனரலின் நிர்வாக சபைக்கு கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களின் நியமனத்தை மன்னர் பிரான் ஆமோதித்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது. அவர்களாவன:—ஸர் ஸி பி. ராமஸாமி அய்யர். டாக்டர் பி. ஆர். அம்பேத்கார், ஸர் ஈ. ஸி. பெந்தால், ஸர் ஜோகேந்திர ஸிங், ஸர் ஜே. பி. ஸ்ரீவஸ்தவா, கான்பகதூர் ஸர் மகமத் ஊஸ்யான்.

மெம்பர்களது பொறுப்பு விவரம்

1.	ஸர் ரெஜினல்ட் மாக்ஸ்வெல்	ஹோம் மெம்பர்
2.	ஸர் ஜே. ரெய்ஸ்மென்	பொக்கிஷ மெம்பர்
3.	ஸ்ரீ எம். எஸ். ஆனே	எமிகிரேஷன் மெம்பர்
4.	ஸர் பிரோஸ் கான் நூன்	ராணுவ மெம்பர்
5.	ஸர் சுல்தான் ஆமத்	சட்ட மெம்பர்
6.	ஸர் முகம்மது ஊஸ்மான்	தந்தி தபால் மெம்பர்
7.	ஸர் ஸி. பி. ராமஸாமி ஐயர்	விளம்பர மெம்பர்
8.	ஸர் ஹோமி மோடி	சப்ளை மெம்பர்
9.	ஸர் இ. பெந்தால்	யுத்த தளவாட போக்குவரத்து மெம்பர்
10.	ஸ்ரீ என். ஆர். சர்க்கார்	வியாபார மெம்பர்
11.	டாக்டர் அம்பேத்கர்	தொழில் மெம்பர்
12.	ஸர் ஜோகேந்திர ஸிங்	கல்வி மெம்பர்
13.	ஸர் ஜே. பி. ஸ்ரீவத்ஸவா	தேச பாதுகாப்பு மெம்பர்
14.	ஸர் ஏ. வேவல்	யுத்த மெம்பர்
15,	ஸர் ஏ ராமஸாமி முதலியார்	யுத்த மந்திரி சபை மெம்பர்

இவர்களில் ஐரோப்பியர் நால்வர் முஸ்லீம் மூவர்: சீக்கியர் ஒருவர்: தாழ்ந்த வகுப்பினர் ஒருவர்: பார்ஸி வகுப்பினர் ஒருவர். ஹிந்துக்கள் ஐவர்.

இந்த அங்கத்தினர்களில் மூவர் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். இருவர் பம்பாய் மாகாணத்தைச் சேந்தவர்கள். இருவர் பஞ்சாப். ஒருவர் ஐக்கிய மாகாணம். ஒருவர் பீஹார், ஒருவர் மத்திய மாகாணம். ஒருவர் வங்காளம்.

யுத்த மந்திரி சபைக்கு

நவநகர் ஜாம்சாஹேபும் ஸர் ராமஸ்வாமி முதலியாரும் யுத்த மந்திரி சபையில் இந்தியப் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். குடியேற்ற நாட்டுப் பிரதிநிதிகளுக்குள்ள அந்தஸ்து இவர்களுக்குமிருக்கும். லண்டனிலிருந்தும் ஸர் ராமஸ்வாமி முதலியார் வைஸ்ராய் நிர்வாகசபை அங்கத்தினராகவே இருப்பார்.

எடுத்துக்கொள்ளப்பட்டதாக சொல்லப்படுகிறது.

* * * *

காமன்ஸில் விவாதம்

லிபியாவில் பிரிட்டிஷ் தோல்விகளைக் கண்டித்து இம்மாதம் முதல் தேதி காமன்ஸ் சபையில் விவாதம் ஆரம்பமாயிற்று. சர்ச்சில் சர்க்கார் மீது நம்பிக்கையில்லாத தீர்மானத்தைப் பிரேரித்த ஸர்ஜான் வார்ட் லாமில்னே யுத்தத்தை நடத்துவதற்குப் பொறுப்பாளிகளான மந்திரி சபையைத் தாக்கினர். “நமது தோல்விக்குக் காரணம் லண்டனிலேயே இருக்கிறதே யொழிய லிபியாவில் இல்லை” என்று அவர் கூறினர். தற்காப்பு இலாகா மந்திரி பதவியை பிரதம மந்திரிப் பதவியிலிருந்து பிரிக்க வேண்டுமென்று அவர்கோரினர்

ஸர் ரோஜர் கீஸ் மேற்படி தீர்மானத்தை ஆமோதித்தார். சர்க்கார் தரப்பில் உற்பத்தி மந்திரி மிஸ்டர் ஆலிவர் லிட்டிடன் பதில் கூறினர்.

* * * *

தீர்மானத்தின் தோல்வி

காமன்ஸ் சபையில் வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் மறுதினம் தோற்கடிக்கப்பட்டது. தீர்மானத்தை எதிர்த்து 475 பேரும் தீர்மானத்திற்குச் சாதகமாக 25 பேரும் வோட் செய்தனர்.

இத்தீர்மானம் சம்பந்தமாக இரண்டு நாள் நடந்த விவாதத்திற்குப் பதிலளிக்கையில் மிஸ்டர் சர்ச்சில் கூறியதாவது:—சர்க்காரை நிலை நிறுத்துவதோ அல்லது மாற்றுவதோ இச்சபையின் கடமையாகும். மாற்ற முடியாவிட்டால் சபை அதை நிலை நிறுத்த வேண்டும். யுத்த சமயத்தில் இவ்விரண்டிற்கும் நடுவாந்தரமான வழி எதுவுமில்லை.

* * * *

‘எகிப்து எகிப்தியருக்கே’

“எகிப்து எகிப்தியருக்கே” என்ற கொள்கையை மதித்து நடக்கத் தாங்கள் உத்தேசித்திருப்பதாக ஜெர்மன்-இத்தாலிய சர்க்கார் ஒரு அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

ஒரு நாட்டின் மீது படையெடுக்கையில் இத்தகைய பிரகடனங்கள் விடுப்பது ஹிட்லர் வழக்கமென்பது யாருக்கும் தெரியும்.

இவ்வாக்குறுதி எந்த அளவு நிறைவேற்றி வைக்கப்படுமென்பது உலகினருக்குத் தெரிந்த விஷயம் தான் என லண்டனிலுள்ளவர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள்.

ஜெர்மன் ராணுவமும் ரகசியப் போலீசும் ஒரு நாட்டை ஆக்கிரமித்துக்கொண்ட பின் எந்த வாக்குறுதியையும் பொருட்படுத்தாமல் அந் நாட்டையும், அதன் மக்களையும் தங்களுக்கு இஷ்டமான முறையில் உபயோகித்துக் கொள்வதே அவர்களின் தொழில்.

* * * *

ஸெபஸ்டோபல் காலியாகியது

ஸெபாஸ்டபோல் காலி செய்யப்பட்டு விட்டதென்று சோவியத் அறிக்கையொன்று கூறுகிறது.

* * * *

எல்-அலமீன் போர்

ராய்ட்டரின் விசேஷ நிருபர் அறிவிப்பதாவது:

எல அலமினில் பிரிட்டிஷ் படை நிலையங்கள்மீது ஜெனரல் ரோமல் நடத்திய தாக்குதல் குலைக்கப்பட்டது. இதன் பேரில் அவரது படை 3 அல்லது 4 மைல் தூரம் பின் வாங்கிற்று. ஆனால் அவர் மீண்டும் பிரிட்டிஷ படை வரிசையைப் பிளக்க முன் வந்திருப்பதாக கெய்ரோவிலுள்ளவர்கள் கருதுகின்றனர்.

பிரிட்டிஷ் படை வரிசையைக் குலைக்க ரோமல் இதுவரை செய்த முயற்சிகள் அனைத்தும் வீணாயின அச்சுப் படைகள் எல் அலமீன் அரண் வரிசையைத் தாக்குகையில் பிரிட்டிஷ் டாங்கிப் படைகள் முதலியவை எதிரிகளைப் பக்கவாட்டில் தாக்கின. மாலை நடந்த டாங்கிப் போரில் எதிரிகளுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டது. இதன் பலனாக ரோமல் தமது படைகளை 3 அல்லது 4 மைல் தூரம் திரும்ப வழைத்தார்.

* * * *

சூயஸ் கால்வாயில் எதிரி குண்டுவீச்சு

எகிப்தில் உள் நாட்டு இலாகா மந்திரி சபை பின் கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறது:—

இம்மாதம் 3-ந் தேதி இரவு சூயஸ் கால்வாய் பிரதேசத்தில் சில குண்டுகள் வீசப்பட்டன. மூன்று பேர்களுக்குக் காய மேற்பட்டது. இவர்களில் ஒருவர் இறந்து போனார். சொத்துக்கும் சிறிது நஷ்ட மேற்பட்டது. நீல நதி டெல்டாவின் வட பிரதேசத்திலும் சில குண்டுகள் விழுந்தன். ஆனால் சேதமில்லை. கெய்ரோவிலும் தென் எகிப்து வட எகிப்து ஆகிய, பிரதேசங்களைச் சேர்ந்த பல மாகாணங்களிலும் விமானப் படை யெடுப்பு அபாயச் சங்குகள் ஒலித்தன.

புதிய பிரகடனம்

★

ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

ராஜப்பிரதிநிதியின் நிர்வாக சபை மீண்டும் விரிவாக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருஷம், 7 பேர் அடங்கிய சபை 12 பேர் அடங்கியதாக மாறிற்று; இப்பொழுது 15 பேர். விரிவாக்க இரண்டு காரணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஒன்று, யுத்தம் காரணமாக வேலை அதிகரித்திருப்பதை சமாளிக்க; இரண்டு யுத்த முயற்சி பலிக்க பிரதிநிதித்வம் வாய்ந்த இந்தியரின் உதவி பெற. முதல் காரணம் ஒப்புக்கு சொல்லிக் கொள்ளலாம்: இரண்டாவது காரணம் ஊதுக்கு நிற்காது.

மாப்பிள்ளைச் சமத்து என்று சொல்வார்கள். தனக்காகவும் தெரியாது: சொன்னாலும் கேட்கும் சுபாவமில்லை. அதை ஒத்திருக்கிறது பிரிட்டிஷ கவர்ன்மெண்டின் போக்கு. இன்றைக்கு யுத்தமே பிரதானம்; யுத்தத்தில் வெற்றி காண வேண்டும்; வெற்றி காண மக்களின். பூர்ண பலம் திரளவேண்டும். திரளவில்லை. வழி சொன்னால் ஏறவில்லை. அதிகாரத்தை மாற்ற மனம் வரவில்லை. ஏதோ செய்வதாக பாவனை செய்கிறார்கள். நாட்டிலுள்ளவர் ஏமாற மாட்டார்கள். பிறநாட்டினர் ஏமாறலாம். என்ன லாபம்? காரியம் கூடுமா?

அதிருஷ்டச் சீட்டு விழுந்தவர்களைக் குறைத்துக் கூறுவது நோக்கமல்ல. கழுத்தை வெகுநாளாக நீட்டி வந்தனர் சிலர். இன்று தான் மாலை விழுந்தது; யோகம் வந்துவிட்டது. யோக்கியதைக்கும் குறைவில்லை. அவர்கள் பெருமைப்பட இடமுண்டு; கவர்ன்மெண்டார் பெருமைப்பட இடமுண்டா. என்பதே கேள்வி. உதிரி ஆசாமிகளை சமூகவாரியாக நியமித்துவிட்டால் பிரதிநிதித்வம் வந்துவிடுமா? மிகைப்படுத்திப் பேசுவதில் லாபமில்லை. நியமனம் பெற்றவர் கட்சித் தொடர்பு இல்லாதவர்; கட்டுக்கடங்காதவர்; கூட்டுப் பொறுப்பில் நாட்டமில்லாதவர். மக்களுக்குப் பரிந்து பேசப் பற்றில்லாதவர். இவர்களால் கவர்ன்மெண்டுக்கு புதுபலம் பிறந்துவிடுமா?

யுத்தம் முற்றிவருகிறது; கவலைக்கிடமான கடடம் நெருங்கி வருகிறது. யுத்த முயற்சி பூர்ண பக்குவம் பெற வேண்டும். அதற்கு வேற்றுமை விலக வேண்டும்; ஒற்றுமை ஓங்க வேண்டும். இதற்காக பகீரதப் பிரயத்னம் செய்து வருகின்றனர் சிலர். அவர்களை ஏளனம் செய்வதுபோலிருக்கிறது இந்தப் பிரகடனம். சமரஸத்தில் சிரத்தை இருப்பதாகவே கவர்ன்மெண்டார் இன்னும் சொல்லி வருகிறார்கள். வாக்குக்கும் செய்கைக்கும் உள்ள வித்தியாசத்தை யார் சமரஸப்படுத்துவது?

நிர்வாக சபையில் மூன்றில் இரண்டு பாகத்தினர் இப்பொழுது இந்தியர். இந்தியாவின் சார்பாகப் பேச இயற்கையில் அவர்களுக்கு உரிமையுண்டு. இன்று பொறுப்பும் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. நாட்டிலுள்ள நிலைமையை அவர்கள் அறியாமலிருப்பதற்கில்லை. நிலைமை திருந்த வழி தேட வேண்டும். இது வரையில் தனித்து நின்றனர். இனியாவது ஒன்று கூடி ஒருமுகமாகப் பேசி வழி காட்டவேண்டும். பதவி ஏற்று நாட்டுக்கு அவர்கள் செய்யக்கூடிய சேவை இது தான்.

* * *

குட்டிக் கதை

நெல் வாய்

★

★

“ரேவதி” எழுதியது

அந்த கிராமத்திற்கே அவள் ஒரு ராணி போல் விளங்கினள். அவள் நல்ல உயரம்: உயரத்திற்கு ஏற்ற பருமன். அவள் அழகிய வதனமும், கம்பீர நடையும், பார்ப்பவர் வணக்கத்தை கவர்ந்தது. அவள் யாரையும் லக்ஷியம் செய்யமாட்டாள். அந்த நெல்வாய் கிராமவாசிகள் ஒன்றும் அறியாத மூடர்கள்; தான் அவர்களை ஆள வந்த சாமர்த்தியசாலி என்பது அவள் நம்பிக்கை. அந்த நெல்வாய் கிராமத்தை விட்டு நாகரீகமுள்ள பட்டணம் அவள் செல்லாததற்கு ஒரே ஒரு தடை தான் இருந்தது. அது எதிர் வீட்டில் வசிக்கும் அழகிய யுவன் மேல் அவள் கொண்ட அடங்காக் காதல் தான்.

கமலியும் சந்திரனும் ஒருவரை ஒருவர் பார்த்ததுமே காதல் கொண்டார்கள். சந்திரன் தன் படிப்பை முடித்துக் கொண்டு, தள்ளாத வயதான தன் தாய் தகப்பன்மாருக்கு ஆதரவாகக் கிராமத்தில் வசித்து வந்தான். கமலி அவனைக் கண்டதும் காதல் கொண்டாள். சம்பிரதாயத்தைச் சற்றும் லக்ஷியம் செய்யாமல், சந்திரனுடன் அவள் தைரியமாகத் தனித்துப் பேசியும் அவனுடன் உல்லாசமாய் வயலில் நடந்தும், அவன் வீட்டிற்குத் தாராளமாகச் சென்றும் வந்தாள். ஆனால் கமலி விவரம் அறியாதவள் 'இல்லை. அவள் மனதில் மட்டும் கெட்ட எண்ணத்துக்கு இடமே கிடையாது.

சமூகக் கட்டுப்பாடுகளில் மூழ்கிக் கிடந்த நெலவாய் கிராமவாசிகளின் மனதுக்கு கமலியின் நடத்தை, களவு, கொலை போன்ற ஒரு பெரிய குற்றமாகப் பட்டது. அவர்கள் கொஞ்ச நாள் தங்களுக்குள்ளேயே ‘குசு, குசு’ என்று பேசிக் கொண்டார்கள். பிறகு வெளிப்படையாகவே கமலியைக் கண்ட இடத்தில் தூஷிக்க ஆரம்பித்தார்கள். கமலி ஒன்றுக்கும் அசைவதாகக் காணவில்லை.

விஷயம் முற்றிவிட்டது. கிராமத்துப் பெரியோர் ஒன்று கூடிக் கமலியின் நடத்தையைக் கண்டித்தார்கள். இதை எப்படியாவது நிறுத்துவது என்ற முடிவுக்கு வந்தார்கள். கட்டுப்பாடுகளுக்கு அடங்கிய அவர்கள் மனதுக்கு, கமலியைச் சந்திரனுக்குக் கலியாணம் செய்வதே சரியான முடிவு என்பது புலப்படவில்லை. அவள் தன் அத்தானுக்கு அல்லவா முறைப்படி வாழ்க்கைப்பட வேண்டும்!

கிராமத்துப் பெரியவர்கள் கமலியை அழைத்தார்கள். அவள், மறுநாள் பொழுது விடிந்ததும், இனிச் சந்திரனை முகமெடுத்தும் பார்ப்பதில்லை என்று சத்தியம் செய்து கொடுக்க வேண்டும், இல்லையேல் ஊரை விட்டு வெளிக் கிளம்ப வேண்டும், என்ற தங்கள் கண்டிப்பான முடிவைத் தெரிவித்தார்கள்.

சந்திரனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. கமலியை அழைத்துக்கொண்டு ஊரை விட்டு ஓடி விடலாம் என்றாலோ தன் கிழத் தாயார் தகப்பனாரை யார் ஆதரிப்பார்கள்? அன்று மாலை, கமலியை அழைத்துக்கொண்டு, கடைசி முறையாக வயலில் உலாவச்சென்றான். கமலியின் மனதில் ஒரு புயற்காற்று எழுந்திருந்த போதிலும் அவள் வெளிப்படையாக ஒன்றும் காட்டிக்கொள்ளவில்லை. அவள் மனதில் கோபம் குமுறிக்கொண்டிருந்தது.

சட்டென்று ஒரு காற்று அடிக்க, நெல் கதிர் ஒன்று அவள் கன்னத்தைத் தழுவியது. கமலியின் கண்களில் திடீரென்று ஒரு ஒளி தோன்றிற்று. அவள் தன் புருவங்களை வளைத்துப் புன்னகை புரிந்தாள். “இந்த மூடர்களுக்கு எல்லாம் நல்ல பாடம் கற்பிக்கிறேன்!” என்று உரக்கச் சொன்னள். இவள் நடத்தை ஒன்றுமே சந்திரனுக்குப் புரியவில்லை. துக்கத்தில் ஒரு வேளை அவளுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதோ என்று கவலைப்பட்டான்.

பொழுது விடிந்தது எங்கும் காலை இன்பம் பரவிக்கொண்டிருந்தது. கிராமத்து ஜனங்கள் பெரியவர்கள் முன் நிற்க கோயில் மண்டபத்தில் கூடி இருந்தார்கள். எங்கும் ஒரே சப்தம். கமலி வருகிறாள் என்றதும் எங்கும் நிசப்தம். கமலி ஸ்நானம் செய்துவிட்டு நன்றாக உடுத்து மூவுலகையும் ஆளும் ராணிபோல் கம்பீரமாக நடந்து வந்தாள். அவள் முகத்தில் கர்வம் கலந்த தன்னம்பிக்கையைத் தவிர, வேறு ஒரு உணர்ச்சியும் தோன்றவில்லை. கிராமத்து ஜனங்கள் மூச்சைப் பிடித்துக்கொண்டு நின்றார்கள்.

“இந்த நெல் வாயில் இருப்பது வரையில் நான் சந்திரனை முகமெடுத்துப் பார்ப்பதில்லை!” என்று கம்பீரமாகச் சொல்லி விட்டு, கமலி, தன் தலைப்பில் கட்டி இருந்த முடியை அவிழ்த்துச் சில நெல்மணிகளை வாயில் போட்டுக்கொண்டாள். கூட்டத்தில் கலங்கிய முகத்துடன் நின்ற சந்திரனை நோக்கி நடந்தாள்.

உடனே கிராமத்துப் பெரியவர்கள் கூக்குரலிட்டார்கள். “அடி பாவி! சத்தியம் செய்த உடனேயே இப்படிச் செய்கிறாயே? உனக்கு நரகமல்லவா கிடைக்கும்? வேண்டாம்! நில்!” என்று ஏககாலத்தில் அதட்டினார்கள்.

கமலி அவர்களை அலக்ஷியமாகத் திரும்பிப் பார்த்தாள்:—

“அட பயித்தியங்களா! நான் ஏன் நரகத்துக்குப் போக வேண்டும்? மெய்க் காதலைக் கெடுக்க வந்த உங்களுக்கு அல்லவா அது சரியான தண்டனை? என் சத்தியத்திற்கு மாறாக நான் ஒரு நாளும் நடக்கமாட்டேன்! இதோ—!” என்று சொல்லி, அவள் வாயில் போட்டிருந்த நெல்லை ‘தூ’ என்று துப்பி விட்டுச் சந்திரனைப் புன்முறுவலுடன் நோக்கினாள்.

கிராமத்தில் எல்லாரையும் விடப் பெரியவர் முன்வந்து நின்றார்:—“சரி! இது தெய்வ சங்கல்பம்! ஈசுவர இச்சை! இல்லாவிட்டால் கேவலம் ஒரு பெண் மனதில் இந்த யுக்தி தோன்றுமா? சீக்கிரமாக இவர்கள் கலியாணத்திற்கு முகூர்த்தம் வையுங்கள்!” என்றார். எல்லோரும் ஆமோதித்தார்கள்

சீவக சிந்தாமணி 3.

மயானத்தில் பிறந்த குழந்தை

★

வ். வேணுகோபாலன் எழுதியது

வானத்தே மயிற் பொறி சுழன்று கொண்டிருந்தது. பொறியினுள்ளே இருந்த விசயை புலம்பிக் கொண்டிருந்தாள், கீழே வெற்றி முரசின் முழக்கத்தை அவள் செவியாற் கேட்டதும், மன்னன் இரந்தானென்று மூர்ச்சையானாள். மயிற்பொறி நீண்டநேரம் வானத்தே சுழன்றமையால் திரிகை ஓய்ந்து இயக்குவாரின்றி கீழே மெல்ல இறங்கலாயிற்று. இராசமாபுரத்தின் எல்லைப் புறத்தில், பிணங்கள் குவிந்து கழுகுகள் உறங்கும் நிழலையுடைய சுடுகாட்டில் நடுநிசிப் பொழுதில் மயிற்பொறி இறங்கியது.

மூர்ச்சையடைந்திருந்த விசயை மயிற் பொறி கீழே இறங்கியதை உணர்ந்து விழித்துக் கொண்டாள். நள்ளிரவாதலின் தான் இறங்கியுள்ள இடம் இன்னவென்றறிந்து கொள்ளவில்லை. பிணப்புகையின் நாற்றத்தையும் பிணங்கள் முட்டு முட்டாக எரிவதையும் கண்டு மயானம் என்றறிந்தாள்,

"என் செய்வேன் தெய்வமே! மன்னவனைப்பறி கொடுத்து மயானத்தே வீழ்ந்தேனே!" என்றரற்றிப் புலம்பினாள். பிணங்களையும், எலும்புக் குவியல்களையும் கண்ணுற்று காண மனம் நடுங்கினாள். பூரண கருப்பமுடைய விசயை, மயிற் பொறியில், அழுத வண்ணம் பால சூரியன் போலும் ஒரு புத்திரனைப் பெற்றாள். புதல்வனைக் கண்ணுற்று கண்டதும் விசையையின் துக்கம் மறைந்தது; சச்சந்தனையே பெற்றெடுத்தாற் போன்ற பெரு மகிழ்ச்சி கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொறிந்தாள். இரண்டாம் கனவு பலித்ததை எண்ணி மகிழ்ந்தாள். அடுத்த கணத்திலே அவ்வுவகை மாறி விசையின் மனத்தே அடக்க முடியாத துக்கம் தோன்றியது.

"ஆ, மகனே, நகர் முழுதும் வாத்திய முழங்கித் திருவிழாக் கொண்டாடிப் பொன் மழை சொரியப் பிறத்தற்குரிய நீ, நரியும் பேயும் நடமாட, கோட்டான் குழறிப்பாட, பிணங்களெரியும் சுடுகாட்டிலோ பிறக்க தவம் செய்தாய்? தீவினையேன் காணவோ இங்குப் பிறந்தாய்; ஐயோ இவ்விடமும் பகைவனுடைய தாயிற்றே! உன்னை எங்குக் கொண்டு இவ்விருளில் செல்வேன்! என வருத்தம் நீங்கப்பிறந்த சிந்தாமணியே! பேசாது கிடக்கின்றாய் நீ! மன்னவன் மொழியை எவ்விதம் நிறைவேற்றுவேன் தெய்வமே!" என்று அரற்றி மனம் வருந்தியிருந்தாள் விசையை.

இவ்வாறு அரற்றும் விசயைக்கு மனமிரங்கிய மயானத்துறையும் தெய்வம், விசயையின் தோழியான சண்பகமாலையென்னும் கூனியின் உருவம் கொண்டு அவள் முன் வந்து வணங்கி நின்றது. தோழியைக் கண்ட விசயை அளவிலா உவகை கொண்டாள். 'தன் நிலைமை இவ்வாறாயிற்றே' என்று கூறி அவளிடம் அரற்றினாள். தோழியுருவம் கொண்டு வந்த தெய்வம் விசயைக்கு ஆறுதல் கூறிக் குழந்தையைக் கையிலெடுத்து அணைத்து மகிழ்ந்தது.

"தோழி! பகைவன் அறிவானாயின் எனக்கும் குழந்தைக்கும் ஆபத்து உண்டாகுமே! எங்கு போவேன்? வழி நீ தான் சொல்ல வேண்டும்" என்று கூறினாள் விசயை. சண்பக மாலையாகிய தெய்வம், விசயையிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு, மயிற்பொறியை அங்கிருந்த குழியில் வைத்து மூடிவிட்டு விசயைக்கு ஆறுதல் கூறியது;

"தேவி! நான் ஒரு மொழி கூறுவேன்; அதை நம்புங்கள்; நடந்ததை எண்ணி வருந்தாதீர்; இப்புதல்வன் உலகத்தையே ஆளப் போகிறான்; பகைவனைப் பழிக்குப் பழி வாங்குவான்; இப்புதல்வனை இப்பொழுதே எடுத்துச் செல்வதற்கு தனவந்தனான வணிகன் ஒருவன் இங்கு வரப் போகிறான். அது எனக்கு மட்டும் தெரியும்; விபரம் கேட்காதீர்; அது காறும் யாம் மறைந்திருப்போம்; வாருங்கள்" என்று சண்பகமாலை கூறினாள்.

அதைக் கேட்ட விசயை சற்று வியப்பும் உவகையும் உற்றாள்; ஆயினும், புதல்வனைப் பிரிய மனம் வருந்தினாள். மகனை எடுத்து இறுகப்புல்லி அணைத்துக்கொண்டு சச்சந்தன் பெயர் பொறித்த மோதிரத்தை மகன் விரலில் அணிவித்துக் கண்ணீர் விட்டு அழுதாள். பிறகு மகனைக்கீழே கிடத்தி. சண்பக மாலையோடு பக்கத்திலுள்ள ஒரு மரப் பொதும்பரில் மறைந்து பார்த்திருந்தாள்.

* * * *

இராசமாபுரத்து வணிகன் கந்துக்கடனுக்கும், அவன் சுநந்தைக்கும் பல பிள்ளைகள் பிறந்து இறந்தன; அது போலவே அன்று பிறந்த பிள்ளையும் இறந்து போயிற்று; அதைத் கண்ட கந்துக்கடன் மனவருத்தத்தோடு இறந்த பிள்ளையை எடுத்துக்கொண்டு மயானத்திற்குப் புறப்பட்டான்: அப்பொழுது அவன் வீட்டில் உணவருந்திச்செல்லும் ஒரு முனிவன் "உலகாளும் மகனை மயானத்தேபெறுவாய்" என்று பலஉண்மைகளைக் கூறிச்சென்றான். அம்மொழியைக் கேட்ட கந்துக்கடன் அதிசயமும் உவகையும் கொண்டு, மயானத்திற்குச் சென்று இறந்த பிள்ளையை ஓரிடத்திற் புதைத்தான். புதைத்த பின் முனிவன் மொழியை நம்பி, அங்குச் சுற்றிலும் சிறிது உலாவினான். இருள் மூடிய மயானத்தே, கருப்புடை தரித்து, கையில் வாளை ஏந்தி உலாவும் கந்துக்கடன், ஒளி வீசும் மணிமோதிரத்தையுடைய குழந்தையை, பிணத்தின் நெருப்புதவியால் கண்டான். ஆர்வமுடன் குழந்தையை வாரி எடுத்து சச்சந்தன் பெயர் பொறித்த மோதிரத்தைப் பார்த்து மனம் நடுங்கி அதைக் கையால் மறைத்துச் சுற்றுமுற்றும் பார்த்தான். விசயையின் சிறுவன் அப்பொழுது சிறிது தும்மவே, சண்பக மாலை உருவம் கொண்ட தெய்வம், தன் மனத்தே, "சீவ," என்று கூறி வாழ்த்தினாள். விசயை அறிவு மயங்கி ஒன்றும் தோன்றாமல் நின்றாள்.

கந்துக்கடன், விசயையின் மகனைக் கையால் மறைத்தெடுத்துச் சென்று தன் மனைவி சுநந்தையிடம் அளித்து, "உன் மகன் பிழைத்தான்" என்று கூறிப் பின் உண்மையைக் கூறினான். குழந்தையின் உருவத்தைக் கண்டு, சுநந்தையும், கந்துக்கடனும் உவகைக் கடலில் மூழ்கினர். சுநந்தை மகனைப்பெற்றெடுத்தாற்போல் மகிழ்ந்து பாலூட்டி எடுத்தணைத்துக் கொஞ்சினாள்.

உலகாளும் மகனைப்பெற்ற மகிழ்ச்சியால், 'மகனுக்குப் பிறந்தநாட் கொண்டாட்ட விழாவை' அப்பொழுதே விடிவதற்குமுன் மிகச் சிறப்புடன் நடத்தினான் கந்துக்கடன். வாத்தியங்கள் முழங்கின. நகரமாந்தர், கந்துக்கடன் மனைக்கு வந்து, விசயையின் மகனை, கந்துக்கடனின் பிள்ளையாகவே எண்ணி, மகிழ்ந்து சென்றனர். 'தன்னுடைய அரசாட்சிக்கு மகிழ்ந்து கந்துக்கடன் கொண்டாட்டத்தை நடத்துகிறான்' என்று எண்ணிய கட்டியங்காரன், கந்துக்கடனுக்கு அளவில்லாத நிதிக்குவியல்களைப் பரிசாக அனுப்பிவைத்தான். கந்துக்கடன் அதைப்பெற்று மகிழ்ச்சியுடன், "அரசன் அழிந்த நகரிலே, அவன் மகன் பகையை வென்று வெற்றிபெறவேண்டும்" என்று வாழ்த்தி. இரவலர்க்கு நிதி வழங்கிப்புகழ் கொண்டான்.

கந்துக்கடன் மகனை எடுத்துச் சென்றதும் கன்றைப் பிரிந்த பசுவைப் போல் மனம் கலங்கிய விசயை, சண்பகமாலையோடு புலம்பிய வண்ணம் அன்றிரவை மயானத்திலேயே கழித்தாள்.

பொழுது புலர்ந்ததும், மயானத் தெய்வமாகிய சண்பகமாலை, விசயைத் தேற்றி, மகன் வளர்ந்து பகையை வெல்வானென்றும், முடிவில் விசயையை அடைவானென்றும் கூறி மகிழ்வித்தாள். விசயை, சண்பக மாலையின் மொழியைக் கேட்டு, முன்பு தான் கண்ட மூன்று கனவுகளையும், அரசன் அதற்குக் கூறிய பயனையும் எண்ணி சிறிது ஆறுதலுற்றாள்.

"சண்பகமாலை! உன்னைப் போல் உற்ற துணையாவார் இனி, எனக்கு வேறு யாருளர்? நீ முக்காலமும் உணரும் வன்மையுடையாய் என்று முன்பு யான் அறியேன். இனி, யான் செய்யும் காரியத்தையும் நீயே கூற வேண்டும்" என்று விசயை கூறினாள்.

"தேவி! யான் இருக்கும் வரையில் தங்களுக்கு ஏதும் குறை வராமற் பாதுகாப்பேன்; இதுவோ பகைவன் நிலம்; தாங்களோ கணவனை இழந்தவராயுள்ளீர்! உறவினரிடம் போதல் தகுதியன்று. இந்நகரைத் தாண்டிச் சிறிது தூரம் சென்று ஆற்றைக் கடந்தால், தண்டகாரணியம் உள்ளது. அங்கே தாபதப் பள்ளி உள்ளது; பல தவ மகளிர் உள்ளனர்; அதுவே தங்கட்குத் தக்க இடம்" என்று கூறினாள் சண்பகமாலை, விசையையும் அதற்கு மனம் மகிழ்ந்து ஒப்புக்கொண்டாள்.

அவ்விதமே இருவரும் தாபத பள்ளியை நோக்கி நடக்கலாயினர். பல ஊர்களையும் சிறிய ஆறுகளையும் கடந்தனர். முடிவில் தண்டகாரணியத்துள்ள தாபதப் பள்ளியில் புகுந்தனர். இருவரையும் பார்த்த தவமகளிர் வரவேற்று உபசரித்தனர். கணவன் இறந்ததற்கும் மகன் வாழ்வதற்கும் தக்கதான ஒரு நோன்பைக் கைக்கொண்டாள் விசயை தவமகளிர் விருப்பப்படித் தனது அணிகலங்களைக் கழற்றி எறிந்தாள். பட்டாடையை நீக்கி காவியாடையை அணிந்தாள் விசயை: தவமகளிரோடு இரண்டு தினங்கள் பொழுது போக்கியபின் தன் மகன் நினைவு மனத்தை வருத்தவே சண்பக மாலையை நோக்கி தோழி "நீ சென்று மகன் செய்தியை அறிந்து வா" என்று கூறினாள். தன் இருப்பிடம் அடையத் தருணம் பார்த்திருந்த தெய்வம அவ்விதமே சம்மதித்து. விசயையை, மாதவமகளிரிடம் அடைக்கலமாக ஒப்பித்து விட்டுப் பிரியாவிடை பெற்று இராசபுரத்து மயானத்தே சென்று தங்கியது மகனிடத்துள்ள ஆசையால் விசயை தோழி இன்று வருவாள் நாளை வருவாள் என்று எண்ணி தெய்வத்தின் வரவை எதிர்பார்த்துக் காலம் போக்கி வந்தாள்.

அடுத்த வாரம்: ஆசிரியன் கூறிய கதை

மாஜி மனைவியின் மிரட்டல்

★

நிய்ாயவாதி

★

ஜெர்மன் உளவாளிகள் பல வந்தப் பயமுறுத்தல் முறைகளைக் கையாளுவதைப் பற்றி முந்திய கட்டுரையில் விவரித்துக் கூறினோம். காரியசித்தி பெறுவதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தையும் எடுத்த கருமத்தை முடிக்கும் சமயத்தையும் கவனிக்கும் அவர்களுக்கு இடம், பொருள் ஏவல் இம்மூன்று வசதிகளும் நன்கு அமைந்திருந்தால், அவற்றால் நல்ல பயன் ஏற்படும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. எனினும் சிற்சில சமயங்களில் எதிர்பாராதவிதமாய் அவர்களது ஆசை நிராசையாய் முடிந்ததும் உண்டு.

ஜெர்மன் உளவு ஸ்தாபனம் எப்படி வேலை செய்கிறது என்பதை விளக்க பின் வரும் காதல் நாடகம் குறிப்பிடபபடடிருக்கிறது.

1

நமது கதா நாயகன் போலந்து தேசத்தவன். நற்குடியில் பிறந்தவன். கல்வியிலும் நாகரீகத்திலும் தேர்ச்சி பெற்ற இளைஞன். அவனுக்கு இங்கிலாந்திலுள்ள போலிஷ் ஸ்தானிகரது காரியாலயத்தில் உத்தியோகம் கிடைத்தது.

ஜெர்மன் வேவு இலாகாவின் நாட்டம் அவன் மீது விழுந்தது. சீக்கிரத்தில் அவன் முன்னுக்கு வருவான் என்பதையும் போலிஷ் ராஜாங்கத்தில் பொறுப்பு வாய்ந்த அந்தஸ்தை அவன் விரைவில் வகிப்பான் என்பதையும் உணர்ந்த பின் ஜெர்மன் வேவு அதிகாரிகள் சும்மா இருப்பார்களா?

யௌவனத்தின் நலன்களை அனுபவிக்க வல்ல ஒரு இளைஞனை வசப்படுத்துவதற்கு ஒரு சுலபமான வழி உள்ளது. அதை ஜெர்மன் வேவு இலாகா பற்றியது வியப்புக்குரியவிஷயமன்று.

அந்த வேவுஸ்தாபனத்தில் ஒரு அழகிய யுவதி வேலைசெய்து கொண்டிருந்தாள். அவள் பெல்ஜிய நாட்டில் பிறந்தவள்: ஜெர்மன் ஜாதியினள். ஆதலின் அவள் ஜெர்மன் உளவுகாரியாக வேலை செய்ய இசைந்திருந்தாள்.

நல்ல ரூபவதியான அவள் பேச்சிலும், நடையுடைபாவனைகளிலும் சிறந்து விளங்கினாள். ஆடவரை எளிதில் வசிகரிக்கும் சக்தி பெற்ற அவளுக்கு வேவுகாரி உத்தியோகம் ஏற்றதே யென்று கூற வேண்டும்.

லண்டனிலுள்ள போலிஷ் இளைஞனை மயக்கி தன் வலையில் சிக்கி கொள்ளும்படி செய்வது என்று அந்த அழகிய வேவுகாரி துணிந்தாள். ஜெர்மன் வேவு இலாகாவின் உத்தரவின்படி இங்கிலாந்துக்குப் பிரயாணமான அவள் அதன் தலைநகரத்தில் தனது காதல் நாடகத்தை ஆரம்பிப்பதற்குச் சித்தமானாள்.

2

பணவசதியில் அவளுக்கு யாதொரு குறைவுமில்லை. உன்னத உடைகளை தரித்து உயர்தர சமூகத்தில் பழக ஆரம்பித்தவளுக்கு போலிஷ் இளைஞனை சந்திக்கும் ஸந்தர்ப்பங்கள் பல கிடைத்தன. மோகனாஸ்திர பிரயோகம் நடைபெறலாயிற்று.

வெகு சீக்கிரத்தில் அவன் அவள் விரித்த வலையில் சிக்கிக் கொண்டான். அவளது அத்புதமான எழிலும் இன்பகரமான சல்லாபமும் அவனது உள்ளத்தை கொள்ளை கொண்டன. அவள் பொருட்டு அவன் தனது உடல் பொருள் ஆவியை தியாகம் செய்ய சித்தமாயிருந்தான். ஒரு நாளேனும் அவளைக் காணமல் அவன் இருக்க மாட்டான். அவளுடன் பேசாமல் போகும்பொழுதெல்லாம் வீண் பொழுது என்று அவன் நினைப்பான். அவளை மணம் புரிந்து கொள்ளாவிடில் வாழ்க்கையில் அடையக்கூடிய பெறும் பேறு தனக்கு சித்திக்காது என்று அவன் எண்ணினான்.

கொஞ்ச காலத்துக்குப் பின் அவனுக்கு உத்யோக மாற்றம் ஏற்பட்டது. அப்புதிய உத்யோகத்தின் பயனாக அவன் தென்அமரிக்காவுக்குப் பிரயாணமாக வேண்டியதாயிற்று.

ஆனால் அவனுக்கு லண்டனை விட்டுச் செல்ல மனமில்லை. தனது ஆருயிர்க் காதலியை விட்டுப் பிரிய அவன் ஒருக்காலும் சம்மதியானன்றோ? அவளைத்தன்னுடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்றும், அவள் தன்னுடன் தென் அமரிக்காவுக்கு வர சம்மதிக்காவிட்டால் தனது வேலையை ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் அவன் தீர்மானித்தான்.

அவனது காதலி அவனை மணக்க சம்மதித்தாள். அவனுடன் தென் அமரிக்காவுக்கு வருவதற்கும் அவள் இணங்கினாள். அவளது காதலனது ஆனந்தத்துக்கு ஒரு எல்லையில்லை. வாழ்க்கையில் பெறற்கரிய பாக்கியத்தை தான் பெற்றுவிட்டதாக அவன் எண்ணி இன்பக் கடலில் மூழ்கினான்.

3

புதிய தம்பதிகளின் இல்வாழ்க்கை புது உலகத்தில் ஆரம்பமாயிற்று. ஆனால் மணமகனது இன்பக் கனவுகள் பலிதமடையவில்லை. அவன் எதிர்பார்த்தபடி அவனது இல்லறம் சுகமான பாதையில் செல்லவில்லை.

காதலியாகி அவனுக்கு எல்லையற்ற இன்பத்தை யளித்த அப்பெல்ஜியப் பெண்மணி மனைவியாய் அவன் எதிர்பார்த்த போகத்தைக் கொடுக்கவில்லை. நெருங்கப் பழகப்பழக அவள் கோபக்காரி என்பதும் அவளை திருப்தி செய்வது சுலபமான காரியமல்ல என்பதும்அவனுக்கு வெளிச்சமாயின.

அவள் மீது கொண்ட காதல் பெருக்கால் அவன் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டிருந்தான். எவ்வளவு தணிந்தும், பணிவாயும் நடந்து கொண்ட போதிலும், அவள் அவனுடன் சண்டை போடாமல் இருக்க மாட்டாள். அற்ப விஷயத்துக் கூடகூக்குரலும் சச்சரவும்தான்

முடிவில் ஏதோ ஒரு காரணத்தைச் சாக்கிட்டு அவள் தனது கணவனை விட்டுப் பிரிந்து சென்றாள். அவள் எங்கு சென்றாள் என்பது ஒரு மர்மமான விஷயமாகவே இருந்தது. அவள் திடீரென்று வீட்டை விட்டுகிளம்பினவள் தான். அப்புறம் இல்லம் திரும்பவேஇல்லை

அவளது பிரிவாற்றாமையால் அவளது கணவன் அளவற்ற துக்கத்தை அடைந்தான். தான் கட்டிய இன்ப மனக் கோட்டை இடிந்ததைக் காண அவனால் சகிக்க இயலவில்லை. தனது வாழ்க்கை வியர்த்தமாய் விட்டது என்று எண்ணி எண்ணி அவன் ஏக்கமடைந்தான்.

நாளடைவில் அவனது துக்கம் தணிநதது. தன்னைப் புறக்கணித்துச் சென்ற பெண்ணை அவன் மறக்கலானான். மன நிம்மதியை ஓரளவு மீட்டுக் கொண்ட பின் அவன் திருப்தியுடன் காலத்தைக் கழிக்கலானான். உத்யோக அலுவல்கள் அவனது கவனத்தைக் கவர்ந்தன. இல்லறத்தில் யாதொரு சுகத்தையும் காணாத அவன் தனது மேல் உத்யோகஸ்தர்களால் இடப்பட்ட ஏவல்களின் மீது கண்ணும் கருத்துமுள்ளவனாய் இருந்தான்.

4

வருஷங்கள் பல கழிந்துவிட்டன. இப்பொழுது நமது கதாநாயகனுக்கு தாய்நாட்டிலேயே உயர்ந்த உத்தியோகம். ராஜாங்கத்துக்கு சிறந்த சேவை புரிந்து வந்த அவன் எல்லாருடைய மதிப்புக்கும் பாத்திரனாய் கண்ணியமான வாழ்க்கையை நடத்தி வந்தான்.

இப்பொழுது அவனுக்கு ஒரு மனைவி இருந்தாள். இன்பகரமாய் இல்லறம் நடத்திய அவனுக்கு குழந்தைகள் இருந்தன. வாழ்க்கையில் இழந்த இன்பத்தை அவன் மீட்டுக்கொண்டான் ஏன்றே சொல்லவேண்டும்.

தன்னைவிட்டுச்சென்ற பெல்ஜியப்பெண்ணைப்பற்றி அவன் விசாரித்துவந்தான். பல வருஷங்களாகியும் அவளைப்பற்றிய தகவல் யாதொன்றும் கிடைக்கவில்லை. ஆதலால் அவள் இறந்துவிட்டாள் என்று அவன் கருதியதில் யாதொருவியப்புமில்லை.

போலந்துக்குத் திரும்பிய பின் அவனது உள்ளத்தைக் கவர்ந்த பெண்ணொருத்தியை சந்திக்கும் பாக்கியம் அவனுக்குக் கிடைத்தது. அவள் அவனுக்கு வாழ்க்கைத்துணைவியாக இல்லறம் நடத்த சம்மதித்தாள். இருவருக்கும் மணம் நடைபெற்றது.

நாள்கள் பல சென்றன. நிர்மலமாய் விளங்கிய ஐரோப்பிய வானத்தில் இடியும் மின்னலும் தோன்றின. ஹிட்லரது போர்த் தாகமும் நாடு கவரும் ஆவேசமும் அக்கம்பக்கத்து நாடுகளுக்கு கவலையை விளைவித்தன. அவர் போலந்தின் மீது பாய்வார் என்ற அச்சம் அந்நாட்டுமக்களுக்குஉண்டாயிற்று

இந்த நிலைமையில், தான், நமது கதா நாயகனின் மாஜி மனைவி போலந்துக்கு வந்தாள். தனது கணவனை சந்தித்தாள். "பழைய கதையை மறந்துவிடுங்கள். என்னுடைய குற்றங்களை மன்னித்துவிடுங்கள். எப்படியும் நான் உங்கள் மனைவி தானே? உங்கள் வீட்டில் நுழைய எனக்கு பாத்தியம் இல்லையா"? என்றெல்லாம் அவனை உபத்திரவப்படுத்தலானாள்.

ஆனால் அது நடக்கக்கூடிய காரியமா? அவனுக்கு புதிய மனைவியும் புதிய வாழ்வும் ஏற்பட்ட பின்னர் நெடுநாளாய் மறந்திருந்த—இறந்து போனதாக கருதப்பட்ட-அப் பெல்ஜிய ஸ்திரீயை ஏற்றுக் கொள்வது எப்படி சாத்தியமாகும்.?

(11-ம் பக்கம் பார்க்க)

ரூ. 60,000 மதிப்புள்ள நகைகள் கொடுக்கப்படுகின்றன

"அமெரிக்கன் நியூ கோல்ட்" அழியாத் தயாரிப்பு உண்மையில் 8-வது அதிசயம. இந்தியா பூராவும ஏற்கனவேயே பிரபலமாய் விட்டன. நிறம மாறாமல் இருக்கும ஒரே கெமிகல் தங்கம் என பொதுமக்களும பத்திரிகைகளும புகழுந்தது. எமது "அமெரிக்கன் நியூ கோல்டை" மேலும பிரபலப் படுதத. 6 தோலா, அமெரிக்கன் நியூ கோல்ட், 2 ஜதை தோடு, 2 ஜதை அழகிய, கைவளையலகள், 2 மோதிரம — அனைத்தும் வசீகரமான மோஸ்தர் — எமது படங்களுடன் கூடிய காடலாகுடன தறகாலீகமாக கொடுக்க உத்தேசித்துள்ளோம். முந்துங்கள்.

New Gold Supply Co., (S. M., M)
RAVI ROAD. — LAHORE.
(EAB)

சண்முகம்

சிறு கதை

★

ரகுநாதன் எழுதியது

வயல் அறுவடைக்கு வருஷா வருஷம் நான்தான் போவது வழக்கம். எங்கள் வயற்காடு நல்ல ஆற்றங்கரை—அதுவும் தாமிரபரணி ஆற்றங்கரைப் பாசனத்தில் உள்ளது. தண்ணீர்த் தட்டு கொஞ்சமும் கிடையாது. 'தீவு, என்பது இது வரையிலும் இல்லை.

எங்கள் வயலைப் பயிர் வைத்து வந்த பள்ளன் பெயர் சுடலை. உண்மையாளி. பொய்யென்கிற பிறப்பே அவனிடம் கிடையாது. கள்ளம் கபடு என்பதற்கும் அவனுக்கும் வெகு தூரம். வயசென்னமோ, அவனுக்குக் கொஞ்சம் அதிகம் தான். ஆயினும் இந்த வயசிலும் அவனுக்குக் குனிந்து நிமிர்ந்து வேலை செய்ய சக்தி இருந்தது. அவனது குடும்பத்தார்கள் தான் எங்களுக்கு பரம்பரை பரம்பரையாய் வயல பார்க்கிறவர்கள்.

அவனுக்கு ஒரு மகன்.

அப்போது அவன் சின்னஞ் சிறுசாயிருந்தான். சுடலை ஒரு நாள் அவனைத் தன் கூடக்கூட்டி வந்து, "இவந்தான் என் 'பவன் சம்முவம் (சண்முகம்)" என்று அறிமுகப்படுத்தி வைத்தான். அப்போதுதான நானும் அந்தச் சிறுவனை அறிந்து கொள்ள முடிந்தது.

நல்ல கறுப்பு: ஆனாலும் உடம்பிலே பளபளப்பு இருந்தது. அந்தக் கறுத்த முகத்தில் இரு கண்கள் உருண்டு உருண்டு சுழன்றுகொண்டே இருந்தன. அவனது நெற்றியோடு நெற்றியாய்ப் பரந்து கிடந்தன அந்த மயிர்ச்சுருள்கள். அதிலிருந்து வேப்பெண்ணெய் நாற்றம் பலமாகக் கிளம்பியது. காதின் இரு புறத்திலும் எண்ணெய் வடிந்து கொண்டிருந்தது. வலது காலிலே ஒரு வெள்ளித் தண்டை, என்னமோ, சாமி பேரைச் சொல்லி நேர்ந்து போட்டதாம். தெம்பு, அவனது பார்வையிலே அதிகமிருந்தது. சின்னச் சாயத் துண்டு ஒன்றை அரையில் கட்டியிருந்தான். சின்னப்பயலாயிருந்தாலும் 'சூட்டிக'முள்ளவனாகத் தோன்றிற்று.

'சம்முவம்' கொஞ்ச நேரம் அப்படியே நின்றான. அவனது கண்கள் எதையோ தேடித் தேடி உருண்டு கொண்டிருந்தன: கொஞ்சங்கூட ஓய்வென்பதையே அறியாத அவனது கால்கள் துறுதுறுத்தன.

வயற்காட்டில் ஒரு பெரிய கரிசல் திட்டு ஒன்று உண்டு. அதிலே அடர்த்துச் செழித்து வளர்ந்திருந்த ஒரு பெரிய வேப்பமரம். அதுதான் களம். பரச்சேரியிலுள்ள சிறுவர் சிறுமியரெல்லாம், அதன் நிழலிலேதான் விளையாடுவார்கள். விடிந்து பொழுதடையும்வரைக்கும் அங்கே எப்போதும் கலகலப்பாய்த் தானிருக்கும்.

சண்முகத்திற்கும் அங்குதான் நோக்கம் இருந்தது. முதலாளி முன்னேயிருந்து போய்விடக் கூடாது என்று தன் தகப்பன் சொல்லிக் கொடுத்த புத்திமதி அந்தச் சிறு மூளையில்—எங்கோ ஒரு மூலையில்—வேலை செய்து கொண்டிருந்தது. அதைத் தட்டிக் கழிக்க அவனுக்குத் துணிவில்லை. திட்டில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர் கூட்டத்திடையே, அவனது கண்ணின் கதிர்கள் எதையோ ஒன்றைத் தேடி அலைந்துகொண்டிருந்தன.

திடீரென்று என்னை ஒரு பார்வை பார்த்தான். தனது அப்பனையும் ஒரு பார்வை; அதுதான் அவ்விடம் விட்டுப் பிரிந்து போவதற்கு விடை கேட்பதுபோலிருந்தது. ஆனால், அந்தக் கண் கேட்கும் கேள்வியை-குறிப்பை-சுடலை உணர்ந்து கொள்ளவில்லை.

"பய நல்ல குணக்காரன். என் அப்பனைப்போலவே முவச்சாடையெல்லாம், சாமி" என்று சுடலை, தனது புத்திர பாக்கியத்தைப்பற்றி, விவரித்துக் கொண்டே போனான். நானோ, சுடலையின் பேச்சு ஒன்றையும் காது கொடுத்து கேட்கவில்லை. அந்தச் சிறு பயலின் பார்வை எதைத் தேடுகிறது என்று அலசிப் பார்க்கத் துணிந்துவிட்டது என் மனம்.

சும்மா நின்றுகொண்டிருந்த சண்முகம், திடீரென ஓடிவிட்டான் திட்டைப் பார்த்து. திட்டின் உச்சியை அடைந்தும் அடையாமலும், "பூவாயி, நானும் வாரேன்" என்ற குரல் ஒருவித சந்தோஷத்துடன், அவனது இளந் தொண்டையிலிருந்து வெளிப்பட்டது. அந்த தொனியில் அன்பு தொனித்தது. அவன்தான் கறுப்பு; ஆனால் அவன் மனதோ வெள்ளை. அந்த வார்த்தைகள் அங்கடித்த வயற்காற்றின் அலைகளிலே மிதந்து வந்து, எனது காதில் ஒரு மோது மோதிற்று.

"பய, கொஞ்சங்கூட மரிவாதியில்லாமே, ஓடிட்டான் பார்த்தியாளா. வரட்டும் பயலே..." என்று பல்லை நெறித்துக் கொண்டே, "ஏலே, இங்கே வாரியா இல்லையா!" என்று மகனைப் பார்த்துக் கூவினான். ஆனால் சண்முகம் திரும்பிக் கூடப் பார்க்காமல், அந்தக் கண்ணும்பூச்சி விளையாட்டில், அதிகமாக லயித்துவிட்டான்.

"பூவாயி!-பூவாயி!"— அந்தச் சிறுவன் சொன்ன வார்த்தைகள், எனது மனதில் ஆணி வைத்து அறைந்தது போல் பதிந்துவிட்டன.

"சுடலை, அது யாரப்பா அந்தப் பூவாயி" என்று தினுஸாக விஷயத்தைப் புரிந்து கொள்ளும் விதமாய்கேட்டேன்.

"அவளா?— என் தங்கச்சி முருவு இருக்காயில்ல, அவ மவதான். இந்தச் சம்முவமும், அதுவும் ரொம்பப் பிரியமுங்கோ. இந்தப் பயலுக்கும், அதைத்தான் கட்டிப் போடணும்...உம் ...யாரு யாருக்கு எங்கனே எங்கனே முடி போட்டு வச்சிருக்கோ?" என்று கூறி, ஒரு பெரிய பெருமூச்சுவிட்டான் சுடலை.

சுடலை அனுபவசாலி: அதனால், பின்னால் நடப்பதை, இப்போதே நிர்ணயிப்பது முடியாத காரியம் என்று அவனுக்குத் தெரியும். விதியிடம் அவனுக்கு அபார நம்பிக்கை.

சண்முகமும், பூவாயியும் நெருங்கிய நண்பர்கள் என்று அறிந்து கொண்டேன், அவர்கள் ஓடியாடித் திரிந்த விதத்திலிருந்து.

இது நடந்து பத்து வருஷம் இருக்கும்.

* * * *

நானும் வருஷாவருஷம் வயற்காட்டுக்குப் போய்த் தான் வந்தேன். ஆனால், நான் சண்முகத்தைப் பார்த்து ஏழு வருஷங்களாகி விட்டன. காரணம், அவன் அங்கு இல்லை.

ஏதோ ஒரு நாள் அப்பன் மகனைப் பிடித்து, கோபத்தில் பலமாக இரண்டு 'ழிழு' இழுத்து

"இந்த அழகிய ஸோப் உங்களுடைய சரும பாதுகாப்பை கவனிக்கட்டும்" என்று ரதன்பாய் சொல்கிருள்

ரதன்பாய் சொல்கிருள் "ஒவ்வொரு ஸ்திரீயும் லக்ஸ் டாய்லட் ஸோப்பினல் தன்னுடைய சருமத்தை வழவழப்பாயும், சுத்தமாயும் வைத்துக் கொள்ளலாம். நான் எப்போதும் என் நண்பர்களுக்கு இதையே உபயோகிக்கும்படி கூறுகிறேன்." லக்ஸ் டாய்லட் ஸோப்பினுடைய மிருதுவான நுரை மிகவும் சுருசுருப்பாக மயிர்க் கண்களிலுள்ள மாசு மருவிற்குக் காரணமான அசுத்தங்களையும், ஒவ்வொரு சிறு தூசிகளையும் போக்கி, சுத்தப்படுத்தி, சருமத்தை புதுமையாகவும் வழவழப் புள்ளவும் செய்கிறது.

லக்ஸ் டாய்லட் ஸோப்

LTS. 64-169 TM. LEVER BROTHERS (INDIA) LIMITED

விட்டான். சண்முகத்திற்கு ரோஷம் பிறந்து விட்டது. இரவோடு இரவாய் கொஞ்சம் பணத்தையும் திருடிக்கொண்டு ஓடி விட்டான். அப்பனுக்கு மகன் ஓடிவிட்ட கவலை, நெஞ்சை அறுத்துத் தின்றது. சில நாட்களில் ஸிலோனிலிருந்து வந்த ஒருவன், சண்முகத்தைப் அங்கு பார்த்ததாக, 'சுடலையிடம் சொன்னன், அக்கரைச் சீமைக்குப் போன மகனை நினைத்து, உருகி உருகிச் செத்துக் கொண்டிருந்தான் அப்பன்.

இந்த வருஷம் அறுவடை காலம். நான் போயிருந்தேன்.

களத்து மேட்டில். ஒரு நார்க் கட்டிலைப் போட்டு, 'ஹாயா' உட்கார்ந்திருந்தேன். பக்கத்திலே வெற்றிலைச் செல்லம். சும்மா கிடக்கிற வாய் எதையாவது மென்று கொண்டிருக்கட்டுமே என்பது எனது தத்துவம், வயலில் கதிரறுக்கும் கூலிகளைக் கவனித்தவாறே இருந்தேன். கவனித்தேன் என்று கூடச் சொல்ல முடியாது. கண் தான் அங்கே இருந்தது. மன மென்னமோ எதிரே தோன்றிய மேற்குத்தொடர்ச்சி மலைக்குச் சென்று, வேட்டையாடிக் கொண்டிருந்தது.

"சாமி, அடியேன் சேவிக்கிறேன்" என்ற குரல் என்னைக் களத்து மேட்டுக்கு—எனது வேட்டைப் பயிற்சியினின்று இழுத்து வந்தது. திரும்பிப் பார்த்தேன்; கும்பிடு போட்டுக் கொண்டு, ஒருவன் நின்று கொண்டிருந்தான். முகம் ரொம்பப் பழக்கமுள்ள மாதிரி, எங்கோ பார்த்த மாதிரி காணப்பட்டது. ஆனல் எந்த முகம் என்று தான் மனதுக்கு ஏற்படவில்லை.

"சாமி, என்னைத் தெரியுதுங்களா? சுடலை மவன், சண்முகம்" என்று குழைந்து, குனிந்து, சொன்னன்.

"அடே, நீயா? இவ்வளவு நாளும் எங்கடா போயிருந்தே" என்று அதிகார தோரணையோடு கேட்டேன், இந்தக் கேள்வியை மனதில்அவன் யாரென்று அறிந்து கொண்ட மகிழ்ச்சி பொங்கியது. அது ஒரு வேளை என் முகத்தில் தெரிந்ததோ, என்னவோ?

சண்முகம், தன்னை நான் அறிந்து கொண்டேன் என்று கண்டவுடனே, ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்தான். அவனது கண்களிலே. ஏதோ ஒரு ஒளி இருந்தது. சிரித்த சிரிப்பிலே. அவனது வெற்றிலைக்காவி ஏறிப் போன பற்கள்-நன்றாக இருட்டி வருகிற வேளையிலே, மேற்கே செக்கச் செவேலென், செம்மை படர்ந்திருக்குமே-அது மாதிரி இருந்தது.

சண்முகம்-இப்போது பழைய சண்முகமில்லை- நல்ல உயரம். முகத்திலே ஒரு களை. சின்ன மீசை-இவ்வளவும் சேர்ந்திருந்தது: தலையைச் சீவி விட்டிருந்தான். அரையிலே ஒருவெள்ளை-கொஞ்சம் நீலம்பாய்ந்த-வேஷ்டி தார் போட்டு கட்டியிருந்தான். காலில் பழைய தண்டை. அது முன்னிருந்ததை விட, பெரியதாக இருந்தது. அது ஒன்று தான் அவனை அடையாளம் கண்டு, ஊர்ஜிதப்படுத்த உதவியது. கையும் காலும் நல்ல கருங்கல் மாதிரி உரமேறிப்போயிருந்தது.

எனக்கும் நேரம் போக வேண்டுமல்லவா? அவனிடம் பேச்சுக் கொடுத்து, நேரத்தைக் கடத்த அவகாசம் கிடைத்தது.

அவன் ஸிலோனுக்குப் போனது, அங்கு ஒரு தோட்டக்காரனை உழைத்தது, கொஞ்சம் காசு பணம் மிச்சம் பிடித்து வைத்தது. இந்தச் சமயத்திலே அங்கு யுத்த பீதி அதிகமானது. மேலும், வீட்டு நினைவு பிடுங்கித் தின்றது, பூவாயி-அவன் அத்தை மகளைப் பார்க்க வேண்டுமென்று-ஒரு காரணமில்லாத ஆசை—எழுந்தது, இதன் காரணமாக அவன்சொந்த ஊருக்கு ஓடி வந்தது-இவ்வளவும் நான் அவனிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்ட விஷயங்கள்.

"ஏய்! உன் கொழுந்தியா பூவாயி எப்படிடா இருக்கா?" என்று பேச்சை வளர்த்த ஒரு கேள்வி கேட்டேன்.

"ஊரிலிருந்து முந்தாநேத்துத் தானே. வந்தேன் சாமி! பூவாயியும், அவ ஆத்தாளும் பக்கத்து ஊரிலே குடியிருக்காளாம். இன்னைக்கி ஒரு வேளை அருப்புக்கு வந்தாலும் வரலாமாம். இன்னைக்கி அவ வராட்டா, நாளைக்கி நானே போய்ப் பார்த்துட்டு வரலாமென நினச்சிருக்கேன் சாமி." என்றான் சண்முகம்.

அங்கப் பேச்சிலே ஒரு உத்சாகம் தொனித்தது. சொல்லி விட்டு ஆகாயத்தைப் பார்த்தான். அங்கு அவனது மோஹன சுந்தரியைக் கண்டானே, என்னமோ!?

"ஏடா. இனிமே முன்னமே மாதிரி ஓடிப்போயிடாதே. ஒழுங்காயிருந்து, நம்ம வயலைப் பாத்துக்கிட்டு கிட. உங்கப்பன் கிட்ட சொல்றேன். உனக்கும் எவளாவது ஒருத்தியைக் கழுத்திலே. கட்டி வைக்கச் சொல்லி, அப்போதுதான் நீ ஒழுங்காயிருப்பே," என்று புத்திமதி கூறினேன் இடக்காக.

"ஆமா சாமி. நானும் அப்படித்தான் நினச்சிருக்கேன். என் அப்பங்கிட்டச் சொல்லி, பூவாயியை எனக்குக் கேக்க... ......," என்று கூறிக் கொண்டு, அந்த வாக்கியத்தை முடிக்கத் தெரியாமல், ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்தான்.

இப்படிக் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டே இருந்தான் சண்முகம். அவனது முகத்தில் காதலின் ஒளி தனது கதிர்களை வீசிக் கொண்டிருந்தன. மேற்கே இறங்கிக் கொண்டிருந்த சூரியனின் செவ்வொளி அவனது முகத்தில் பட்டு, அதை மினுங்கச் செய்தது.

எங்கேயோயிருந்து பேச்சு எங்கேயெல்லாமோ போயிற்று.

அவனது மனதில் அவனைத் தேடி ஒரு அதிர்ஷ்டம் வரப்போவதாக ஒரு மகிழ்ச்சி. ரொம்ப நாளாய்க் காணாது விட்டு, பின்னால், தேடிப்பார்க்கும் ஒரு கண்ணின் பார்வை அவனிடம் இருந்தது, வயல் நடுவே கதிரறுக்கும் பெண்களின் கூட்டத்திலே, யாரையோ ஒருத்தியைத் தேடிப் பிடிக்க ஆசைப் படுகிறான் என்று அவனது கண் சுழற்சி காட்டிக் கொடுத்து விட்டது..

ஆ! கண்டு விட்டான். இல்லாவிடில், அந்தக் கறிய முகத்தில் தோன்றிய பிரகாசத்தினால் —சிரிப்பினால்—அந்தக் காவி பிடித்த பற்கள் வெளியே தெரிய நியாயமில்லையே.!

சண்முகம் என்னைத் திரும்பிப் பார்த்தான். அவனது பார்வையைக் கண்டுவிட்ட என்னைக் கண்டு, கொஞ்சம் வெட்கம் அடைந்தான்.

"சாமி, போயிட்டு வாரேன்" என்று கூறி ஒரு கும்பிடு போட்டான்.

"எங்கடா போறே பூவாயி நினப்பா" என்று போட்டேன் பதிலுக்கு.

"அதில்லே சாமி, பூவாயி அங்கே நிக்கிருள். மதியந்தான் வந்திருக்கா. அவளைப் பாத்துட்டு வாரேன்" என்று கூறிச் சென்று விட்டான் சண்முகம்.

அவனது கண்களும், கால்களும் ஈட்டிபோல், பூவாயி பக்கம் பாய்ந்து சென்றன.

பூவாயி கதிர் அரிந்துகொண்டிருந்தாள். சண்முகம் அவள் பக்கம் போனான்.

'பூவாயி!" என்ற வார்த்தை உள்ளத்தில் இவ்வளவு நாளும் அடங்கிக் கிடந்த ஆர்வத்தையும் அன்பையும் சேர்த்து எடுத்துக் கொண்டு காற்றில் மிதந்தது.

பூவாயி திரும்பிப் பார்த்தாள். கூப்பிட்டது யாரென்று க்ஷண நேரத்தில் புரிந்து கொண்டாள். அந்த இதழோரத்தில்-நிச்சலனமாக இருக்கும் ஒரு நீர் நிலையின்மேல், மெல்லிய பூங்காற்று வீசும்போது ஏற்படுகின்ற சின்னஞ் சிறு அலைபோல ஒரு புன்னகை வீசி மறைந்தது. அந்தப் பார்வை சண்முகத்தை அப்படியே அள்ளிக் குடிப்பது போல் இந்தது. அந்தப் பல்லினால் ஏற்பட்டது ஒரு 'பளீர்' மின்னல்.

பூவாயி நல்ல அழகி. சிவப்பல்ல; புது நிறம். அவளது உடலின் ஒவ்வொரு அங்கத்தையும் பிரமன் நாள் கணக்கில், குழைவு கொடுத்து, செய்திருக்க வேண்டும். இல்லையெனில், அவையேன் அப்படி நெகிழ்ந்து குழைந்து போகவேண்டும்? அவள் தன் தலைமயிரை வாரி ஒரு சுருட்டைக் கொண்டை போட்டிருந்தாள். கழுத்திலே ஒரு கருவமணிப்பாசி. அதோடு கூட அந்த மஞ்சள் கயிறு. கொஞ்சம் மருக்கொழுந்து கழுத்தோடு உறவாடிக்கொண்டிருந்தது. ஆள் நல்லவாட்டசாட்டமாய் இருந்தாள்.

சண்முகத்திற்கு அவளைப் பார்க்கக் கண்கள் கூசின. காதலாலா? அழகாலா? என்று ஆராய்ச்சி செய்ய இடமே இல்லை. இரண்டுந்தான் என்று லேசாக ஒரு 'போடு' போட்டு விடலாம்.

வாயில் ஒதுக்கியிருந்த வெற்றிலையைத் துப்பிவிட்டு, கண்களையும் காதுகளையும் தீட்டிவிட்டுக்கொண்டு பார்த்தேன்,

சண்முகம் லேசாக பூவாயியிடம் பேச்சுக் கொடுத்துப் பார்த்தான்.

"ஊரிலே அத்தெ எல்லாம் சும்மா யிருக்காயில்லெ" என்று க்ஷேமலாபம் விசாரிக்கப் பீடிகை போட்டான்.

"நல்லா இருக்கா, அது கிடக்கட்டும். நீ எங்கேயோ அக்கரைச் சீமைக்கில்லா போயிட்டியாம்... நெசமாத்தானு?" என்று பரிவோடு கேட்டாள் பூவாயி.

"ஆமா, அதுக்கு ஒண்ணுங் குறைச்சலில்லெ. ஒன்னையெல்லாம் மறந்துட்டு அங்கே இருக்கனுமின்னு, என்ன கஷ்டமா யிருக்குது தெரியுமா?" என்று மெதுவாக் விதையை எடுந்து எறிந்தான்.

"போ மச்சான், கேலி பண்ணுதே; பண்ணினின்னு......" என்று இழுத்து போட்டாள். அவள் அவனது வார்த்தையை விநயமாக எடுத்துக் கொள்ளவில்லை. என்ன இருந்தாலும் சொந்த மச்சானல்லவா? உரிமைக்காரனல்லவா?

பேச்சு வளர்ந்தது.

நானும் நார்கட்டிலில் சாய்ந்திருந்தவாறே இவ்வளவையும் கவனித்துக் கொண்டிருந்தேன்.

சண்முகம் சம்பாஷணையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான். களிப்பும் சிரிப்பும் பொங்கி வந்தன அவனுக்கு.

இவ்வளவு நேரமும் 'அது' வெளியாகவில்லை.

அந்த நேரம் வந்தது.........

இத்தனை நேரம் நிமிர்ந்து நின்று பேசிக்கொண்டிருந்த பூவாயி, குனிந்து கதிரெடுக்கப் போனாள். அவளது சிற்றாடைக்குள் ஒளிந்து கிடந்த அந்தப் புனிதமான வஸ்து வெளி வந்தது. ஆம் அதுதான் அந்த மஞ்சக் கயிறு.!

சண்முகம் அந்தக்கயிற்றைப் பார்த்தான். ஏதோ ஒரு பெரிய பாறுங்கல்லைத்தூக்கி 'தொப்' பென்று அவனது நெஞ்சில் போடுவது போன்ற உணர்ச்சி. அந்தத் தாக்குதலால், மார்புக் கூடெல்லாம் சடசட என்று முறிந்து நொறுங்கும் சப்தம். அவனது வாய் அடைத்துப் போயிற்று. அவனது முகம் இருண்டது. அந்த உதடு கூட கப்பென்று மூடிப்போயிற்று.

உலகம் இருண்டது......

எனது பேய் மனத்திலும், 'திக்'கென்று ஒரு அதிர்ச்சி. காரணம்! அந்த மஞ்சக் கயிற்றின் நுனியில் ஒரு வஸ்து தொங்கிக் கொண்டிருந்தது.

அது தாலி!.........

சண்முகத்திற்கு ஒன்றும் ஓடவில்லை. மார்பிலே ஒரு பெரிய ஏமாற்றத்தின் பயங்கர சுழற்றி சுற்றிச் சுற்றி வந்தது. அது எப்போது, அவனை மயக்கம் போட்டு, கீழே விழச் செய்யுமோ, திட்டமாய்ச் சொல்ல முடியாது.

"பூவாயிக்கு கலியாணம் ஆகிவிட்டது"—இது தான் அவனது மனதைப் பேய் மாதிரி அறைந்த அடி.

"பூவாயி!" என்று சண்முகத்தையும் விட, அன்பாகக் கூப்பிட்டது ஒரு குரல்.

இதுதான் அவனது தலையில் சரிந்த அடுத்த பாறை.

"அவுக கூப்பிடுருக. நான் போறேன்" என்று கதிர்கட்டை போட்டுவிட்டுப் போனாள் பூவாயி. மின்னினின் செய்கை போலிருந்தது அவளது போக்கு. அவளது முகத்தில் கொஞ்சங் கூட உணர்ச்சி யென்பதே யில்லை. இதுமாதிரி எத்தனையோ தடவை கூப்பிடக்கேட்டுப் போனவள்தானே அவள்.

(12-ம் பக்கம் பார்க்க)

நமது தொடர் கதை

விஜயனின் காதலி

★

டாக்டர் சாட்டர்ஜி எழுதியது

1

பெண்களின் விவாக வயது விஷயத்தில் எவ்வளவு பொய் சொல்லப்படுகிறது! ஆயினும் கூட அதன் முடிவு வளர்ந்து கொண்டே போய், கல்யாணம் நடக்கும் என்ற நம்பிக்கை கூட இல்லாமல் போய்விடுகிறது.

அனுராதாவின் நிலைமையும் இப்படித்தான். சம்பவம் பழைய காலத்தியதல்ல. தற்காலத்தியது தான். இந்தக் காலத்தில் கூட, வரதக்ஷிணை, குலம் கோத்திரம், ஜாதகம், சகுனம், இவைகளைப் பார்த்துப் பார்த்து அனுராதாவின் வயது இருபத்தொன்று ஆகிவிட்டது. ஆயினும் அவளுக்குத் தகுந்த வரன் ஒன்றும் கிடைக்கவில்லை, இதைச் சுலபமாக நம்ப முடியாவிட்டாலும் விஷயம் முற்றிலும் உண்மை. அன்று காலையில் கூட கிராமத்து ஜமீன்தாரரின் கச்சேரியில் இதைப்பற்றித்தான் விவாதம் நடந்துகொண்டிருந்தது. புது ஜமீன்தாரின் பெயர் ஹரிஹர கோஷால். அவர் கல்கத்தா வாசி. அவருடைய சிறிய மகன் விஜயன் கிராமத்தைப் பார்ப்பதற்காக வந்திருந்தான்.

வாயிலிருந்த சிகரட்டைக் கீழே வைத்துவிட்டு "ககன சட்டர்ஜியின் சகோதரி என்ன சொன்னாள்? வீட்டை விடமாட்டாளா?" என்று கேட்டான்.

சேதி அறிந்துவரச் சென்றிருந்தவன் "என்ன சொல்ல வேண்டுமோ அதைச் சின்னபாபுவிடம் சொல்வதாகச் சொன்னாள்" என்றான்.

விஜயன் கோபமடைந்து "சொல்வதற்கென்ன இருக்கிறது? அவர்களை இழுத்து வெளியில் விட நானே நேரில் வர வேண்டுமா? வேலைக்காரர்களால் ஆகாதா?" என்றான்.

பதில் சொன்னவன் மௌனமாக இருந்தான். விஜயன் மீண்டும் "விநோதா! சொல்லவும் கேட்கவும் இதில் ஒன்றும் இல்லை! நான் எதையும் கேட்கப் போவதில்லை. இதற்காக நான் அங்கு போக வேண்டுமா? அவள் நேரே இங்கு வந்து தன் கஷ்டத்தைச் சொல்லமாட்டாளா? என்றான்.

"நான் அதையும் அனுராதாவிடம் சொன்னேன்! அதற்கு எனனிடம் விநோத அண்ணா நானும் பெரிய இடத்துப் பெண்! நான் வீட்டை விட்டு வெளியே போய்த்தான் ஆக வேண்டுமானால் ஒரே தடவையாய்ப் போய் விடுகிறேன். அடிக்கடி வெளியே போக என்னால் முடியாது என்றாள் என்றான்.

"என்ன பெயரென்று சொன்னாய் நீ? அனுராதா! பெயர் என்னவோ அழகாய்த்தான் இருக்கிறது. இதனால்தான் இது வரை அகங்காரம் குறையவில்லை போலிருக்கிறது?" என்றான் விஜயன்.

"இல்லை! பாபு!" விநோதன் கிராமத்து மனிதன் அனுராதாவின் துர்பாக்கிய நிலைமையை விளக்கிக் கொண்டிருந்தான். சமீபகால சரித்திரத்திற்குக்கூட ஒரு பூர்வோத்திரம் ஏற்பட்டு விடுகிறது. அது தான் இங்கு சொல்லப்போகும் விஷயம்.

கிராமத்தின் பெயர் கணேசபுரம். ஒரு சமயம் அது இந்த அனுராதாவின் மூதாதையர்களுடையதாக இருந்தது ஐந்தாறு வருஷங்களாகின்றன. அது பிறர் கைக்கு மாறி விட்டது. இந்தச் சொத்தின் வருஷ வருமானம் எல்லாம் இரண்டாயிரம் ரூபாய்க்கு அதிகம் இருக்காது ஆனால் அனுராதாவின் தந்தை அமர சட்டர்ஜீயின் வரவுசெலவு இருபதினாயிரம் ரூபாய் இருந்தது: கடன்சுமையால குடியிருந்த வீடுவரை ஏலம் போடும்படியான நிலைமை ஏற்பட்டு விட்டது. டிக்ரி எனனமோ ஆகிவிட்டது. ஆனால் நடவடிக்கை ஒன்றும் நடைபெறவில்லை பணம் கொடுத்தவர்கள் பயந்து பேசாமல் இருந்தனர் சட்டோபாத்யாயர் எப்படிப்பட்ட சிறந்த குலீனர். அப்படியேதான் அவருடைய ஜபதபங்களும் ஆசார விசாரங்களும் பிரசித்தமானவை அவருடைய ஓட்டைப் படகான குடும்பம், வீண் செலவென்னும் தண்ணீரில் கழுத்து வரை ஆழ்ந்து விட்டது ஆயினும் மூழ்கவில்லை ஹிந்து மதத்தின் நம்பிக்கையில் மலர்ந்தெழுந்த அதன் பாய்ச்சீலையில் பக்தி, சிரத்தை, கர்மம் என்னும் காற்று வீசி வீசி மூழ்கிவிடும் நிலைமையிலிருந்த அந்தப் படகை தள்ளி அமர சட்டர்ஜீயின் ஆயுள் எல்லையைத் தாண்டிக்கொண்டு போய் விட்டுவிட்டது. இந்த விதமாக அவருடைய வாழ்நாள் செம்மையாகவே கழிந்துவிட்டது. அவர் இறந்ததும், அவருடைய கர்மகாரியங்களும் தடபுடலாகத்தான் நடந்தன: ஆனால் கூடவே சொத்திற்கும் முடிவு ஏற்பட்டுவிட்டது. இவ்வளவு நாள் வரை வெளியே தலை தூக்கி மூச்சுவிட்டுக்கொண்டிருந்த அந்தப் படகை, "பாபு வீட்டு"க் கௌரவம் அதப் பாதாளத்தில் ஆழ்த்தத் தயங்கவே இல்லை. தந்தையின் மரணத்திற்குப் பிறகு குமாரன் ககனனுக்கு, டிக்ரி கடனுக்குட்பட்ட ஒரு ஓட்டை வீடும், கழுத்து வரை கடன் சுமையைத் தாங்கி நிற்கும் கிராமத்து சொத்துக்களும், கொஞ்சம், மாடு கன்று, ஆடு, நாய், பூனை முதலிய மிருகங்களும் கிடைத்தன. இத்துடன் தந்தையின் மற்றொரு மனைவியின் மகளான அனுராதாவின் பொறுப்பும் அவன் தலை வந்து விழுந்தது.

அவளுக்காக ஒரு வரனும் கிடைத்திருந்தது. கிராமத்திலேயே ஒரு பெரிய மனிதர். ஐந்தாறு பிள்ளை குட்டிகளையும் பேரன் பேத்திகளையும் விட்டு விட்டு அவர் மனைவி இறந்து விட்டாள். அதனால் அவர் மணம் செய்து கொள்ள விரும்பினார்.

அனுராதாவும் "அண்ணா! தலை எழுத்து. ராஜபுத்திரன் வருவான் என்று எண்ணவே இல்லை! என்னை அங்கேயே கொடு, காசு உள்ளவர். குறைந்தது சோறு துணிக்குப் பஞ்சமில்லை!" என்று சொன்னாள்.

ககனன் ஆச்சரியத்துடன் "இதென்ன பேச்சு? த்ரிலோசன பாபுவிடம் பணம் இருப்பதென்னவோ வாஸ்தவம் தான்! ஆனால் அவருடைய தாத்தா ஜாதியை விட்டு சதிபுரம் சக்ரவர்த்தி வீட்டில் கல்யாணம் செய்து கொண்டார், தெரியுமா? அவர்களுக்கு என்ன மதிப்பு இருக்கிறது?" என்றான்.

'மற்றவை! இருக்கட்டும், இல்லாமல் போகட்டும் பணம் இருக்கிறது. குலம் குலம் என்று பட்டினி கிடப்பதைவிட ஒரு வாய் சோறு கிடைக்கும் இடம் நல்லதல்லவா அண்ணா?" என்றாள் தங்கை,

ககனன் தலையை அசைத்துக் கொண்டே "அது முடியாது! அது நடக்காது!" என்றான்.

"ஏன் நடக்காது? கொஞ்சம் சொல்லேன்! அப்பா தான் இதெல்லாவற்றையும் பார்த்தார். ஆனால் உனக்கு இதனாலெல்லாம் என்ன நன்மை" என்றாள் அனுராதா.

இங்கே ஒரு விஷயம் சொல்ல வேண்டியது அவசியம். தந்தையிடம் இருந்த ஆசார அனுஷ்டானம் மகனிடம் கிடையாது. மத்ய மாம்ஸ விஷயங்களிலும், இன்னும் இதர விஷயங்களிலும் அவன் கொஞ்சம் பிரியமான புருஷன். அவனுடைய மனைவி இறந்த பிறகு, அடுத்த கிராமத்திலுள்ள ஒரு கீழ்க் குலத்து ஸ்த்ரீ இன்றுகூட அவனுடைய மனைவியின் ஸ்தானத்தை பூர்த்திசெய்து வருகிறாள். இந்த விஷயம் எல்லோரும் அறிந்தது தான்.

ககனனுக்கு இந்த ஜாடை தெரிந்துவிட்டது அவன் சீறுக் கனைத்துக்கொண்டு, "என்னிடம் அந்த வரட்டு வைதீகங்களெல்லாம இல்லை! அதற்காக நம்முடைய மேலான குலத்தை உனக்காகத் திலாஞ்சலிசெய்துவிட்டு ஏழேழு தலை முறைக்கும் நரகத்தில் விழவேண்டுமா? நாம கிருஷ்ணனின் சந்தானங்கள்! குலீனர்கள்! போ! போ! இம்மாதிரி வார்த்தைகளை இனி வாயால் கூட உரைக்காதே!" என்று சொல்லி அவன் கோபத்துடன் சென்றுவிட்டான். த்ரிலோசன் கங்கோபாத்யாயரைப் பற்றிய பிரஸ்தாபம் இத்துடன் நின்றது.

ககனன் ஹரிஹர கோஷாலின் ஆதரவை நாடினான். குலீன பிராம்மணனை கடனிலிருந்து விடுவித்தே ஆகவேண்டும். ஹரிஹர கோஷால் கல்கத்தாவில், மரவியாபாரம் செய்து லக்ஷாதிபதியானார். ஒரு சமயம் அவருடைய பாட்டி வீடு இந்தக்கிராமத்தில் தான் இருந்தது. சிறு வயதில் இந்த பாபுக்களின் நல்ல நிலைமையை அவர் பார்த்திருக்கிறார். பல சமயங்களில் இவர்கள் வீட்டில் பூரியும், மிட்டாயும் நிறையச் சாப்பிட்டிருக்கிறார். அவர் விஷயத்தில் ரூபாய் பெரிய விஷயமல்ல. ஆகையால் அவர் ஒப்புக்கொண்டார். சட்டர்ஜியின் சகல கடன்களையும் தீர்த்துவிட்டு ஹரிஹர கோஷால் கணேசபுரத்தை வாங்கிக்கொண்டார். அந்த சமயம் சட்டர்ஜி தன்னிடமிருந்து கொஞ்ச ரூபாயை கொடுத்து வீட்டைமாத்திரம் மீத்திக் கொண்டார். வாயளவில் ஒரு ஷரத்து பேசிக்கொண்டார்கள். அதாவது, வாசற் பக்கம் இருக்கும் இரண்டுமூன்று அறைகளை கச்சேரிக்காக விட்டுவிட்டு, பின்புறம் ககனன் இப்பொழுது இருப்பதைப்போலவே இருந்து வருவதென்று பேசிக்கொள்ளப்பட்டது.

ஜமீனை வாங்கியாகிவிட்டது. ஆனால் பிரஜைகள் புதிய ஜமீன்தாரின் ஆதீனத்தை ஒப்புக்கொள்ளவில்லை. சொத்து கொஞ்சம் தான். வசூலும் சாதாரணம் தான். ஆகையால் இதற்காக பெரிய அளவில் எந்தக் காரியத்தையும் செய்யமுடியாது.

ஆனால் ககன சட்டர்ஜி இந்தச் சிறிய சொத்தின் பலத்தைக் கொண்டே, ஹரிஹர கோஷாலின் ஆள்கள் ஒருவரையும் இந்தக் கிராமத்தில் தங்கவிடாமல் செய்து வந்தான். கடைசியில் ககன் தானே தன் இஷ்டத்தின் பேரில் அந்தக்கிராம அதிகாரி ஆனான். அதாவது பழைய ஜமீன்தார் புதிய ஜமீன்தாரரின் குமாஸ்தா ஆனார். அவன் பிரஜைகளைத் தன் வசப்படுத்திக்கொண்டான். ஹரிஹரர் தலை கீழாய் நின்று பார்த்தார். ஆயினும் வசூல் விஷயம் பழைய நிலைமையிலிருந்து சற்றும் மாறவே இல்லை. ஒரு தம்பிடி கூட குத்தகை வசூலாகவில்லை. இந்த விதமான அலங்கோலத்தில் இரண்டு வருஷங்கள் கழிந்தன. இதன் பின் ஒரு நாள் திடீரென்று, "ககன் சட்டர்ஜியைக் காணவில்லை. நகரத்திலிருந்து வந்த ஹரிஹரரின் குமாஸ்தா தேடிப் பார்த்து விசாரித்ததில், வசூலான ரூபாயை எடுத்துக்கொண்டு, எங்கோ சென்று விட்டதாக செய்தி வெளியாயிற்று.

போலீஸில் ஒரு பிராது, கோர்ட்டில் ஒரு வழக்கு, ஆள் மூலம் புலன் விசாரித்தல், ஆகிய செய்ய வேண்டியவைகளைச் செய்தும், பணமோ, ககனசட்டர்ஜியோ இருக்கும இடம் தகவல் கிடைக்கவில்லை. ககனின் சகோதரி அனுராதாவும் அவளுடைய தூர பந்து ஒருவரின் வீட்டுக் குழந்தை ஒன்றும் வீட்டில் இருந்தார்கள். போலீஸார், யதாப்பிரகாரம்—இவர்களை மிரட்டி உருட்டிப் பயமுறுத்திக் கேட்டார்கள். ஆயினும் விஷயம் ஒன்றும் வெளியாகவில்லை.

விஜயன் சீமைக்குச் சென்று வந்தவன்: அவன் ஒவ்வொரு தடவையும் பரீக்ஷையில் தவறியதற்கு ஹரிஹரருக்கு ஏராளமான ரூபாய் செலவாயிற்று. அவனால் பரீக்ஷையில் தேற முடியவில்லை. ஆகையால் அவன் புத்திசாலித்தனமாய் மனதைத் திடப்படுத்திக்கொண்டு இரண்டு வருஷத்திற்கு முன்பே ஊருக்குத் திரும்பிவிட்டான். அவன் அடிக்கடி "சீமையில், பாஸ் செய்வதிலும், பெயில் ஆவதிலும் ஒரு வித்தியாசமும் இல்லை. புஸ்தகத்தைப் படித்துவிட்டு யார்தான் பாஸ் செய்யமாட்டார்கள்? அப்படியானால் இங்கேயே படிக்கலாமே. சீமைக்கு எதற்காகச் செல்ல வேண்டும்" என்பான்.

வீடு வந்து சேர்ந்து தந்தையின் மர வியாபாரத்தைப்பற்றி, தன்னுடை கற்பனை துர் அவஸ்தையை வெளியிட்டு, விழுந்தடித்து அதன் மானேஜ்மெண்டைப் பார்க்கலானான் வேலைக்காரர்களிடையே அவனுடைய பெயர் அடிபடலாயிற்று. குமாஸ்தாக்கள் அவனிடம் சிங்கத்தைக் கண்டு நடுங்குவதைப்போல் நடுங்கினர்.

அவனுக்கு வேலை ஓய்ச்சல் ஒழிவின்றி இருக்கும். இந்த சமயத்தில் கணேசபுரத்தின் விஷயம் அவனிடம் வந்தது இதைக் கேட்டு அவன் "இது தெரிந்த விஷயம் தானே! அப்பா செய்வதெல்லாம இப்படித்தான்! ஆனால் வேறு வழி இல்லை! அசட்டையாய் இருந்தால் காரியம நடக்காது. தானே சென்று ஜமீனில் ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும். ஆகையால் அவன் கணேசபுரம் வந்தான். ஆனால் இந்தச் சிறிய வேலைக்காக அவன் அதிக நாள் கிராமத்தில் கழிக்க முடியாது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஆக வேண்டிய வேலைகளை முடித்துவிட்டு அவன் கல்கத்தா திரும்ப வேண்டும். எல்லா வேலைகளும் அவன் தலையில்தான் பொறுத்திருந்தது. அவனுடைய அண்ணா அஜயன் அட்டர்னியாக இருந்தார். சுயநலக்காரர். தன் ஆபீஸ், தன் வேலை, தன் பெண்டுபிள்ளை இவை தான் அவருக்கு. குடும்ப விஷயத்தை அவர் கவனிப்பதில்லை அவர் மனைவி பிரபாமயி கல்கத்தா சர்வகலா சாலையினின்றும் வெளிவந்த ஒரு பட்டதாரி. வீட்டிலிருப்பவர்களைப் பற்றி அவளுக்கு ஞாபகமே கிடையாது. மாமனார், மாமியார் உயிரோடு இருக்கிறார்களா இல்லையா என்பதுகூட அவளுக்குத் தெரியாது. இதைத் தெரிந்து வைத்துக்கொள்ள அவளுக்கு சமயமும் இல்லை: ஐந்தாறு அறைகள் உள்ள வீட்டின் ஒரு பாகத்தில் அவர்கள் வசித்தார்கள். மற்றவர்கள் அங்கு செல்வதென்றால் கொஞ்சம தயக்கம்தான். அவர்களுக்கு தனி வேலைக்காரர்கள். உடியா சமையற்காரன் பெரிய பாபுவின் தடையினால் இதுவரை அவர்கள் முஸல்மான் சமையற்காரனை வைக்கவில்லை. இது சில சமயம் பிரபாவுக்குக் கஷ்டமாக இருக்கும். ஆயினும் மாமனாருக்குப் பிறகு தன் எண்ணம் பூர்த்தியாகுமென்று நம்பினாள். தன் மைத்துனன் விஷயத்தில் அவளுக்கு எப்பொழுதுமே கொஞ்சம அலட்சியம்தான். ஆனால் அவன் சீமைக்குச்சென்று வந்த பிறகு அவளுடைய மனோபாவத்தில் சற்று மாற்றம் ஏற்பட்டிருந்தது. அவனை நான்கைந்து நாள் விருந்திற்கழைத்து, தன் கையாலேயே சமையல் செய்து போட்டு அந்த சமயம் தன் தங்கை அநீதாவையும் விஜயனுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். அந்த சமயம அநீதா பி.ஏ பாஸ் செய்துவிட்டு எம்.ஏ. படிக்கத் தயாராக இருந்தாள்.

விஜயன் மனைவியற்றவன். மனைவி இறந்த பிறகு தான் அவன் சீமைக்குச் சென்றான். அங்கே என்ன செய்தான்? என்ன செய்யவில்லை- இதைப் பற்றி ஆராய வேண்டிய அவசியமில்லை. ஆனால் திரும்பி வந்து வெகு நாள் வரை ஸ்த்ரீ விஷயத்தில் அவன் மன நிலை ஒரு தினுசாக இருந்ததென்பது தெரிந்தது. அவன் தாய் அவனை மணம் செய்து கொள்ளும்படி கூறிய போது, அவன் அதற்கு எதிர்வாதம் செய்து அதை சமனம் செய்து விட்டான். அதிலிருந்து அந்தப் பேச்சு அமுங்கியே இருக்கிறது.

கணேச புரத்திரத்திற்கு வந்து ஒரு பிரஜையின் வீட்டில் இரண்டு மூன்று அறைகளை வாங்கி, அதில் தன் கச்சேரியை ஏற்படுத்தினான்.

ஜமீனைப் பற்றிய தஸ்தாவேஜுகள் எவ்வளவு கிடைக்குமோ அவ்வளவும் ககனன் வீட்டிலிருந்து பலவந்தமாகக் கொண்டு வரப்பட்டன. பிறகு அவனுடைய சகோதரி அனுராதாவையும், அவளுக்கு உறவினனான அந்தச் சிறு பையனையும வீட்டை விட்டு வெளியேற்ற முயற்சிகள் நடைபெற ஆரம்பமாயின. விநோத கோஷுடன் அப்பொழுது தான் இது விஷயத்தை பற்றி ஆலோசனை செய்யப்பட்டது.

கல்கத்தாவிலிருந்து வரும் போது விஜயன் தன்னுடைய ஆறு ஏழு வயதுள்ள மகனைக் கூட அழைத்து வந்திருந்தான்.

மேல் நாட்டாரும் இப்படித்தான் சொல்கிறார்கள் என்று கேள்வி. ஆனால் அவர்கள் பேச்சு ஒரு புறம் இருக்க, இங்கே ரகசியம் வேறு. விஜயன் சீமை சென்றிருந்த போது, இந்த தாயற்ற பிள்ளையை, தினம் கவனிப்பாரற்றே காலம் கழிந்தது. பையனின் பாட்டி எப்போதும் படுத்த படுக்கையாகவே இருந்தாள். இவ்வளவு பணம் காசு இருந்த போதிலும் அவனைக் கவனிப்பவர் யாருமில்லை ஆகையால், பாவம். அந்தக் குழந்தை கவனிப்பாரற்றே வளர்ந்து இந்த வயதை அடைந்தான்.

கணேசபுரம் புறப்படும்போது விஜயனின் மதினி, அனுதாபம் காட்டி "லாலாஜி, பையனைக் கூட அழைத்துக் கொண்டு போகிறாயா? அது புது இடம். கிராமம், பட்டிக்காடு! கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும்! எப்பொழுது திரும்புவாய்?" என்று கேட்டாள்.

"எவ்வளவு சீக்கிரம் ஆகிறதோ!"

"அங்கே உனக்கு ஒரு வீடு கூட இருக்கிறதென்று கேள்வி! அப்பா வாங்கினாரா?"

"வாங்கி என்னவோ இருக்கிறார்! வாங்கினேன் என்ற பெயர்தான்! இன்னும் அடைந்தபாடில்லை! மன்னி! வீடு இருக்கிறது! ஆனால் அதில் நமது அனுபோகம் இல்லை."

'ஆனால் இப்பொழுது தான் நீயே போகிறாயே! இப்பொழுது அனுபோகத்திற்கு வர தாமதமாகாது."

"அப்படித்தான் எண்ணுகிறேன்!"

"அனுபோகம் ஆனதும் சேதி அனுப்பி வை!"

"ஏன் மன்னி?"

இதற்குப்பதில் பிரபா "கிட்டத்தானே இருக்கிறது. இந்தப் பட்டிக் காடுகளை இதுவரைப் பார்த்தில்லை. ஒருதரம் போய்ப் பார்த்துவிட்டுவருகிறேன். அநீதாவுக்கும் காலேஜ் சாத்தியிருக்கிறார்கள்! அவளும் கூட வர விரும்புவாள்!" என்றாள்.

இந்த பிரஸ்தாபத்தைக்கேட்டு விஜயன் சந்தோஷமடைந்து "மன்னி! வீடு அனுபவத்திற்கு வந்ததும் சேதி அனுப்புகிறேன். அப்பொழுது முடியாதென்று சொல்லக்கூடாது. தங்கள் தங்கையையும் அவசியம் கூட அழைத்து வரவேண்டும்" என்றான்.

அநீதா நல்ல யுவதி! பார்ப்பதற்கும் நன்றாக இருப்பாள். பி, ஏ. ஆனர்ஸ் பாஸ் செய்திருக்கிறாள்.

சாதாரண ஸ்த்ரீ ஜாதிகளின் மேல் விஜயனுக்கு வெறுப்பிருந்தபோதிலும், ஒரு குறிப்பிட்ட பெண்ணிடம்- இவ்வளவு குணங்கள் இருந்தும் கூட அவன் இந்தமாதிரி, இருந்திருக்க முடியுமா? அதுவல்ல விஷயம். அங்கே சாந்தமான கிராமத்தின், ஜனசந்தடியற்ற இடத்தில், வயதான மரத்து நிழலில் குளிர்ந்த ரம்யமான கிராமப் பாதையில், ஏகாந்தத்தில், திடீரென்று அவனெதிரில் வந்து நின்ற சம்பவம் அவன் மனதில் மாறி மாறி ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது.

"சர்மா" மொழிபெயர்த்தது

(தொடரும்)

வேற்கூறு, சொரி முதலியவற்றிற்கு சிறந்த நிவாரணி.

ஜாம்-பெக் நமைச்சலை ஒழித்துவிடும்.

வேர்கூறு, சொரி, நமைச்சல் மற்றும் கோடைகால சரும உபத்திரவங்களால் அவதிப்படுவது ஆச்சரியமானதே. ஜாம்-பெக் சமனமூட்டி நிவர்த்தியளிக்கும். ஜாம்-பெக்கிலுள்ள அற்புத மூலிகைச் சத்துக்களை சருமம் சுலபமாக இழுத்துக்கொள்ளுகின்றது. சூரிய வெப்பம் காரணமாக உலர்ந்துவிடும் இயற்கை ஆயிலகளை ஜாம்-பெக் அளிக்கின்றது. ஜாம்-பெக் மெழுகு ரூபா 1 அல்லது ரூபா 2—4: ஸோப் ரூபா 1. பவுடர் ரூபா 1. ஏஜண்டுகள்:— மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.

தமிழ் நூல்கள்

அசலாம்பிகை	2	4
நவரத்னலாகெட்	0	12
சாணுகதி சாஸ்திரம்	0	8
லோகமான்ய திலகர்	0	8
இரஞ்சிதமாலா	0	8
ஜகஜ்ஜாலன்	1	10
குழந்தைக்கட்டி	1	4
உலகரகசியம்	1	0

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதது

501 ஸ்பெஷல் ஸோப்பு வீட்டுச் சலவைகளை லகுவாக்கின்றமையால் எல்லா மனையாட்டிகளுக்கும் அது இன்றியமையாததாகும். அது வெள்ளை வஸ்திரங்களை வெண்மையாகவே யிருக்கச்செய்வதுமன்றி, சாயம் தோய்த்த ஆடைகளையும், மெல்லிசானதுகளையும் பிரத்தியேகமாகவே வெளுக்கிறது.

டாம்கோ விற்பனை இலாகா, 1, வாரன்ரோட், பீமன்பெட், மைலாப்பூர், மதராஸ்.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட், டாடாபுரம் & பம்பாய்.

FS. 1950.

நவயுகப் பிரசுராலயத்தின்

வெளியீடுகள்

	ரூ.அ.		ரூ.அ.
வாஞெலியும் ஒளிபரப்பும்	2 0	சிந்தனையும் மின்ஞெளியும்	0 10
புதுமைப்பித்தன் கதைகள்	2 0	தேய்ந்த கனவு	0 8
திருச்சி ஜெயில்	1 12	எல்லோரும் ஓர் குலம்	0 8
பெண்	1 12	ஸப்த நதிகள்	0 8
கிரஹதாகம் (பாகம் 1)	1 12	மேஹர் உன்னிஸா	0 8
ஷை (பாகம் 2)	1 12	வார்தா திட்டம்	0 8
மின்சாரத்தின் விந்தை	1 12	பாரதியார் படம்	0 8
மகாராஷ்டிர ஜீவன் உதயம்	1 12	வாழ்க்கைச் சிற்பம்	0 6
கட்ட பொம்மு	1 8	திரிபுரி காங்கிரஸ்	0 6
வின்ஸடன் சர்ச்சில்	1 8	அடிவானத்துக்கு அப்பால்	0 6
பேஸிஸ்ட் ஜடாமுனி	1 8	மதனி	0 4
நடைச் சித்திரம்	1 8	ஆறு கதைகள்	0 4
மழையும் புயலும்	1 8	விவாகமானவர்களுக்கு ஒரு யோசனை	0 4
ஆங்கிலக் கவிதை மலர்கள்	1 0	சைவ உணவு எது?	0 4
ஷை பரிசுப் பதிப்பு	1 8	அவன் அபரன்	0 4
ஆரய்ப் அரசியல் நூல்	1 8	தளபதி டிகால்	0 4
அற்புத உலகம்	1 0	அடிமைத் தாய்	0 3
உலகத்துச் சிறுகதைகள்	1 0	பக்த குசேலா	0 3
தேவதாஸ்	1 0	நாசகாரக் கும்பல்	0 3
பாகிஸ்தான்	1 0	வ. ரா. சரிதம்	0 2
கோயரிங்	0 12	மந்தரை சூழ்ச்சி	0 2
வெற்றி யாருக்கு?	0 12	ஆர்க்கிமிடீஸ்	0 2
சீதா கல்யாணம	0 12	சுகாதாரச் சட்ட விளக்கம்	0 1
மாதவி	0 12		
முப்பெருந் தலைவர்	0 10		

தபாற்செலவு, ரயில் செலவு பிரத்யேகம்.

எமது எல்லா ரயில்வே புத்தகசாலைகளிலும், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

இவைகள் தவிர வியாபாரிகளுக்கும், வாசக சாலைகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் கோர்வையான அகப்படக்கூடிய நாவல்கள் முதலியன ஆர்டரின் பேரில் அனுப்பப்படும்.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

ஏமனி நெர நம்மு கொந்துமு க்ருஷ்ணு
எந்துகிந்தவாது

சரணம்

1. ஜலக மாடுவேள வலு வலுதா சிமம்–
   மலயிம் பகலேதா
2. முதிதல ரம்மனி திலகமுலிடி பண்ட
   மோவி னெக்கலேதா
3. முனு நீவு வென்னர கிஞ்சி தருணுல
   மோமுன பூஸிபோலேதா
4. வதினெகாரி சந்தமுனவச்சி பாவட
   வதலிஞ்சி போலேதா
5. தொரிகிதி வனி சாடி செப்ப போதே தல்லி
   யுரமுன னுண்டலேதா
6. காமிஞ்சி யக்ஞ பத்னுலு வேடக
   வேணுகான மொனர் பலேதா
7. ஆநாடு பொங்கலி நீ கிடி கொங்நாள்ளு
   வானனுண்ட லேதா
8. தரனு த்யாகராஜ வினுதுனி
   பலுகுலு தப்பி போவனலேதா

II

க்ருஷ்ணு!	—ஸ்ரீ க்ருஷ்ணு!
ஏமனி நெர நம்மு கொந்துமு	—உன்னை எவ்விதம் நாங்கள் உறுதியாக நம்ப முடியும்?
எந்துகு இந்த வாது	—ஏன் எங்களுடன் வீண் வாதம் செய்கிறுய்?
ஜலக மாடு வேள	—ஒரு சமயம் நாங்கள் யமுனையில் நீராடிய பொழுது
வலு வலுதாசி	—எங்கள் வஸ்திரங்களை எடுத்து ஒளித்து
மம்மு	—எங்களை
அலயிம் பகலேதா	—நீ திண்டாட வைக்கவில்லையா?
முதி தலன்	—கோபியர்களை
ரம்மு அனி	—சமீபத்திற்கு வா என்றழைத்து
திலகமுலு இடி	—அவர்கள் நெற்றியில் திலகங்களை இட்டு
பண்ட	—உன்னுடைய பற்களினுல்
மோவின்	—அவர்களுடைய உதடுகளை
னெக்க லேதா	—நீ நன்ருய்க் கடித்து விடவில்லையா?
முனு	—முன்னெரு சமயம்
நீவு	—நீ
வென்ன ஆர கிஞ்சி	—வெண்ணையைத் திருடித் தின்றுவிட்டு
தருணுல	—கோபியர்களின்
மோமுன	—முகங்களில்
பூஸி போலேதா	—கையிலுள்ள வெண்ணையைத் தடவி பரிகாசம் செய்து ஓட வில்லையா?
வதினெகாரி சந்தமுன	—ஒரு கோபிகையின் அண்ணன் மனைவி போல்
வச்சி	—வேடம் பூண்டு வந்து
பாவட வதலிஞ்சி	—அந்தக் கோபிகை கட்டியிருந்த பாவாடையைத் தளர்த்தி விட்டு
போலேதா	—நீ ஓடிப் போகவில்லையா?
தொரிகிதிவி அனி	—கையும் களவுமாய்
சாடி செப்ப தோதே	—உன் தாயிடம் பிடிபட்டாயென்று நாங்கள் கோள் சொல்லப் போன சமயத்தில்
தல்லி யுரமுன	—தாயான யசோதையின் இடுப்பில்
உண்ட லேதா	—நீ வீற்றிருக்க வில்லையா?
யக்ஞ பத்னுலு	—யமுனு நதிக்கரையில் யாகம் செய்து வந்த பிராம்மணர்களின் மனைவிகள்
காமிஞ்சி	—உன்னிடம் மோஹங் கொண்டு
வேடக	—தங்களை ஏற்று அருளும்படி உன்னை வேண்டிய தருணத்தில்
வேணு கானமு ஒனர்பலேதா	—புல்லாங்குழலை வாசித்து அவர்களை நீ ஏமாற்ற வில்லையா?
ஆ நாடு	—அன்ருெரு நாள்
பொங்கலி நீகு இடி	—இந்திரனுக்குப் படைக்க வேண்டிய பொங்கலை உனக்கு அர்ப்பணம் செய்யச் செய்து
கொங் நாள்ளு	—(அதன் பயனுய்) சில தினங்கள்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

"உன்னை நான் எப்படி வீட்டுக்குள் அழைத்துக்கொள்வது? உன்னை மீண்டும் மனைவியாக ஏற்றுக்கொள்ள இயலாதது என் குற்றமன்று. நீ என்னை உபத்திரவிப்பது நியாயமாகாது என்று ஆக்ஷேபித்தான்" அவளது மாஜி காதலன்.

"அப்படியானுல் நான் ஜெர்மனிக்குச் செல்வேன். அங்கே நான் உத்தியோகத்தில் இருக்கிறேன், ஆனுல் ஒரு நிபந்தனை அதற்கு நீங்கள் இணங்கவேண்டும்" என்று பெல்ஜியப்பெண் வற்புறுத்தினுள்.

"என்ன அது?" என்று வினவினுன் அவளதுபழையசணவன்.

"நான் ஜெர்மன் வேவு காரியாலயத்தில் உத்யோகம் பார்க்கிறேன். உங்களது ராஜாங்கத்தின் சம்பந்தமான சில ரகசியங்களை நான் அறிய விரும்புகிறேன். மேலும் எனக்கு அவ்வப்பொழுது நான் கேட்கும் விஷயங்களுக்கு சரியான விவரங்கள் தெரிவிக்க வேண்டும். இல்லாவிடில் நான் தங்கள் மீது வியாஜ்யம் தொடுத்து எனது உரிமைகளை ஸ்தர்பிக்க யத்தனிப்பேன். அதனுல் உங்கள் புதிய மனைவிக்கும் உங்களுக்கும் சொல்லொணுத் உபத்திரவும் அவமானமும் சம்பவிக்கும்" என்று பயமுறுத்தினுள்.

என்ன செய்வான் பாவம்! சில நாள்கள் தவணை கேட்டுக் கொண்டான். அவனது மாஜி மனைவி ஜெர்மனிக்குத் திரும்பினுள். இன்னும் சில நாட்களில் அவனிடம் வருவதாகக் கூறி விட்டுச் சென்ருள்.

நல்ல வேளையாய் அவளால் மிரட்டப்பட்டவன் தனது நிதானத்தையும் நேர்மையையும் இழந்து விடவில்லை. போலந்திலுள்ள வேவு இலாகாவின் தலைமை உத்தியோகஸ்தனிடம் சென்று, அவன் எல்லா விஷயங்களையும் ஒளிக்காமல் கூறினுன்.

வேவு இலாகா தலைவன் முகத்தில் புன்னகை தென்பட்டது. "சரிதான், அந்தப் பெல்ஜியத்தாள் உன் மாஜி மனைவியா? பயப்படாதே. அவள் உனக்கு மட்டும் மாஜி மனைவியன்று. வேறு எத்தனையோ பேர் வழிகளுக்கும் மாஜி மனைவியாய் நடித்து அவர்களை பயமுறுத்தி இருக்கிருள். அவள் வந்தால் நான் அவளை விரட்டியனுப்புவேன்" என்ருன்.

ஜெர்மனியிலிருந்து வந்த வேவுகாரிக்கு ஏமாற்றமும் தோல்வியுமே சித்தித்தன. போலந்து வேவு இலாகாவின் தலைவன் அவளை மிரட்டினுன். "எங்கள் உத்யோகஸ்தர்களில் ஒருவனை மிரட்டி பயமுறுத்தி அவனிடமிருந்து ராஜாங்க ரகசியங்களை அறிய வந்திருக்கிருய் நீ. அப்படிச் செய்வது கடுமையான தண்டனைக்கு இலக்கான குற்றம். இது முதல் தடவையானதால் உன்னை மன்னித்தேன். இன்னெரு தடவை நீ இங்கே வரும் பக்ஷத்தில் உனக்கு சிறைவாசம் நிச்சயம் கிடைக்கும். மனைவியாய் நடிக்கும் உனக்கு எவ்விதமான உரிமையும் கிடையாது என்பது எங்களுக்குத் தெரியும்" என்று அவன் அவளை நோக்கிக் கடுமையான குரலில் எச்சரிக்கை செய்தான்.

வானமு உண்ட லேதா	—கடும் மழை பெய்து அதனுல் நாங்கள் கஷ்டப்பட வில்லையா?
தரனு	—இவ்வுலகில்
த்யாகராஜ வினுதுனி	—த்யாகராஜனுல் துதிக்கப்பட்ட கிருஷ்ணு. நீ உனது
பலு குலு	—வார்த்தைகள்
தப்பி போவு அனலேதா	—ஒருக்காலும் தவருது என்று சொல்லி எங்களை ஏமாற்ற வில்லையா

III

முன் கதைச் சுருக்கம்:—பக்தைகளான கோபிகைகள் ஒரு சமயம் கண்ணனுடைய குழலோசையைக்கேட்டு பரவசமாகி அவனைத்தேடிக் கண்டுபிடித்து அவனுடன் மிகுந்த அழகுகொண்டு விளங்கும் யமுனு நதி தீரத்தை அடைந்தனர். அங்கு அவர்கள் கரையோரத்திலிருந்த ஓர் ஓடத்தைக் கண்டனர். பின்பு அவர்கள் ஒன்றுகூடி ஆலோசித்து க்ருஷ்ணனைத் தங்களுடன் அழைத்துச் செல்லக்கூடாதென்று தங்களுக்குள் முடிவுசெய்துகொண்டு ஓடத்திலேறி ஆனந்தமாகப்பொழுதுபோக்க ஆயத்தம் செய்தார்கள்.

கோபியர்களின் சம்பாஷணையை உற்றுக்கேட்டுக்கொண்டிருந்த ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா.

ஸத்யம்பெள தனமாடலெல்ல ஜல—ஸஞ்சாருண்ட நே லேகனே
ப்ரத்யேகம்புக தெப்புலாட நதிலோ—பத்யம்புகா தெப்புடுன்
நித்யம்பெள னபகீர்த்தி'மீரலபலல்—நிர்வாஹமா ஸ்திரிலகீ
க்ருத்யம் பெவ்வரி போதனே வலதனென்—க்ருஷ்ணுண்டு பூ போண்ட்லதோன்.

"கோபிகா ரத்னங்களே! என் உதவியில்லாமல் ஓடத்தை நதியில் நடத்துவது உங்களால் இயலாது. பெண்மணிகளான உங்களால் இயலாத காரியத்தை ஏன் செய்யத்துணிந்தீர்கள்? இவ்விதம் செய்ய உங்களுக்கு யார் புத்தி புகன்றனர்? வேண்டாம். இதனுல் உங்களுக்கு அபகீர்த்தி உண்டாகும். நான் வந்து உங்களுக்கு ஓடத்தை நடத்துவதில் உதவி செய்கின்றேன். என்னையும்கூட அழைத்துச்செல்லுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

ஏமனி நேர:—இது நௌகா சரித்திரத்தில் நாலாவது கீர்த்தனம். க்ருஷ்ணன் கூறியதைக் கேட்ட கோபிகாமணிகள் கண்ணனைத் தங்களுடன் அழைத்துச் செல்லாததற்கு காரணமாயுள்ள அவனது பால லீலைகளைக் குறிப்பிட்டுக் காட்டி நிந்தித்ததை இந்தக் கீர்த்தனத்தில் காணலாகும்.

ஜல்மோடு வேடுவேள:—ஸ்ரீமத் பாகவதம், தசமஸ்கந்தம் 22-வது அத்யாயத்தில் இச்சந்தர்ப்பம் விவரிக்கப்பட்டுள்ளது.

முனு நீவு:—'ராம தைவமா' என்ற கீர்த்தனத்தின் 2-வது சரணத்திலும் இதே விஷயம் கூறப்பட்டுள்ளது.

தோலிகீதி:—"ஸ்ரீக்ருஷ்ண கர்ணுமிருதத்தில"

அந்த: க்ருஹே க்ருஷ்ண மவேக்ஷ்ய சோரம்
பத்வா கவாடம் ஜனனீம் கதைகா |
உலூகலே தாமனி பத்த மேனம்
தத்ராபி த்ருஷ்ட்வா ஸ்திமி தாப பூவ||

என்ற ச்லோகத்தில் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய இவ்வித லீலை வேறு விதமாக கூறப்பட்டிருக்கிறது.

காமிஞ்சி:—யக்ஞ பத்தினிகளின் சரித்திரம் இங்கு கூறப்பட்டுள்ளது, இது, பாகவதம், தசமஸ்கந்தத்தில் விரிவாகக் காணப்படுகிறது.

ஆனாடு:—ஸ்ரீமத் பாகவதம் தசமஸ்கந்தம் 24, 25. 26 அத்யாயங்களில் இந்தக் கதை விஸ்தாரமாக் கூறப்பட்டுள்ளது.

IV

ராகம் ஸௌராஷ்டிரம் மிச்ரசாபு தாளம்

(17-வது மேள ஜன்யம். ஆ. ஸரிக்மபதநிஸ். அவ. ஸ்நிதாபமகமரிஸ.)

பல்லவி

; தா	;	நீ ஸ்ா	ஸ்ா நீ	தா	தா ;	நீ தா	பா ;
ஏ		ம .	னி .	ரெ	ர	நம் .	மு
; பா	மா	தா பா	பா மா	கா	மா ;	காரீ	ரீ ;
கொங்		து .	மு .	க்ரு	.	. .	ஷ்ண
;	ரீ ;	ஸா ;	ஸ்ா நீ	ஸா	ரீ ;	மா கா	பா மா
எங்	.	து	கிங் .	.	த	வா .	. .
கமா	கரீ	ரீ ;	ஸா ;	;	; ;	; ;	; ;
து	. .	.	.				

சரணம்

; தா	தா	நீ ஸ்ா	ஸ்ா ;	ஸ்ா	ஸ்ா ;	ரீ ஸ்ா	ஸ்ா ரீ
ஜ	ல .	க .	மா	டு	ட	வே .	ள .
ஸா	ஸ்ா நீ	ஸ்ா ;	ஸ்ா நீ	ஸ்நி	தா ;	த நீ த	பா ;
.	வலு	வ	லு .	தா .	.	சி . .	மம்
;	பா தா	தா ஸ்ா	ஸ்ா நீ	தா	தா பா	பா மா	பா ;
ம	ல	யிம்	. .	ப	க .	லே .	.
தா	நீ தா .	பா ;	; ;				
தா		.		; ;	;	பா ;	பா ;
						க்ருஷ் .	ண

(மற்ற சரணங்களையும் இது போன்றே பாடவும்)

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

சண்முகத்திற்கு மூளை சிதறி விடும் போல் இருந்தது. "டபார்" என்ற சப்தம். மண்டை கிறு கிறது. ரத்தம் ஓடுகிறது. அவனது மூளை அதன்மேல் உருண்டு போகிறது—இவ்வளவும் வெறி! உணர்ச்சி! சித்தப் பிரமை!

பூவாயி போய் விட்டாள்.

சண்முகம் அப்படியே நின்ருன். அவனது கால்களும் கைகளும் குளிர்வதுபோலிருந்தன.

"பூவாயி!" என்று கூப்பிட வாயெடுத்தான். ஆனல், அந்த ஒட்டி யுணர்ந்த நாவிலிருந்தும், அடைபட்ட தொண்டையிலிருந்தும் அந்தப் பெயர் முழுவதும் வரவில்லை. அப்படியே துக்கத்தை விழுங்கிப் பார்த்தான். அதுவும் முடியவில்லை.

கொஞ்சதூரத்தில் சதிபதிகள்.

சண்முகத்தின் கண்கள் பூவாயியின் மேல், அப்படியே குத்தி நின்றன.

"ஏவ்லா, குழந்தை அழுவுற சத்தம் கேட்கலே. போயி, குழந்தையைப் பாரு" என்று ஆக்ஞை பிறந்து வந்தது புருஷக்கார ஆண் மகனிடமிருந்து.

"புள்ளை வேறியா?" என்று முணு முணுத்தது அந்த அடிபட்டு நைந்து சாகிற உள்ளம்.

எனக்கு ஒரே வருத்தம்.

சண்முகம் அப்படியே இருளடித்த பேய் பிடித்த மனிதன்போல் நின்ருன் வயற் காட்டிலேயே.

அவனது மனதில் என்ன என்ன அலைகளெல்லாம் மோதினவோ? அதனுல் எந்தப் பக்கமெல்லாம் சரிந்து விழுந்ததோ?

* * * *

நான் ஊருக்குத் திரும்பி வந்து விட்டேன்.

இரண்டு நாள் கழித்து, சுடலை நெல் கொண்டு வந்தான். அவனது முகத்தில் துக்கத்தின் கருந்திரை அகலமாகப் படர்ந்திருந்தது. என்னைக் கண்டானே, என்னவோ 'கூவே கூவே' என்று அழ ஆரம்பித்து விட்டான்.

"ஏனப்பா அழுகிருய்?" என்றேன்.

"சாமீ, என் மவன் பழைய படியும் என்னை இந்த வயசு காலத்திலே தவிக்க விட்டுட்டு ஓடிப் போயிட்டான் சாமி!" என்று கூறி முடிப்பதற்குள் ஒரு அழுகை அழுதான்.

சுடலையைத் தேற்றுவதற்குள் என் பாடு பெரும்பாடாய்ப் போய் விட்டது. கடைசியில், அவனிடமிருந்து, சண்முகம் பட்டாளத்தில் சேர்ந்து விட்டான் என்று தெரிந்தேன்.

யுத்தத்திற்குப் பயந்து-சாவிற்குப் பயந்து—சிலோனிலிருந்து அடித்துப் புரண்டு விழுந்து வந்த அதே சண்முகம் இப்போது, யுத்தத்தின் முன்னிலையில், சாவையும் எதிர்க்கத் துணிந்து சென்று விட்டான். அது எப்படி?

அவனது மனத்திலே இவ்வளவு நாளும் ஓடியாடித் திரிந்த அந்தச்சிறு-ஆனல்-எவ்வளவோ சாதித்து விடக் கூடிய ஆசை நிறைவேறவில்லை. அவன் கருதிவந்த லட்சியம் கைகூடவில்லை. அதனுல் அவன் சாவிற்குப் பயப்படவில்லை.

லட்சியத்தின் தோல்வியே, வெறுப்பும் துணிச்சலுந்தானு?

பண்டைக்காலப் போர் முறை

யுத்தப் பிரகடனம்

★

—தி. நா. சுப்பிரமணியர் எழுதியது—

பண்டைக் காலத்து மன்னர்கள் தங்கள் வாழ் நாட்களின் பெரும் பகுதியைப் போரிடுவதிலேயே செலவழித்தனர் என்று சிலர் கருதுகிறார்கள். அது அங்ஙனம் இல்லை. அவர்கள் போர் தொடுப்பதைக் கடைசிப் பட்சமாகவே வைத்திருந்தார்கள்.

ஓர் அரசன் மற்றொரு நாட்டின் மீது படையெடுத்துச் செல்வதற்கு முன்னுல் தீர யோசித்துப் பார்த்தே அந்தக் காரியத்தை மேற்கொள்ளுவான். தன்னுடைய முக்கியமான மந்திரிகளையும், பிரதானிகளையும் இதர பண்டிதர்களையும் வரவழைத்துச் சபை கூட்டி ஆலோசிப்பான். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குத் தோன்றிய கட்சியை எடுத்து உரைத்து விஷயத்தை அலசிக் காட்டுவார்கள். படையெடுப்பை நடத்துவது அவசியம் என்றே தீர்மானிக்கப்பட்டால் அவ்விதமே முடிவு கட்டுவார்கள்.

ஆயினும் அரசன் அதை ஒப்புக்கொள்வதற்கு முன்னர், தன்னுடைய படை வலிமை போதியதாக இருக்கிறதா, படை வீரர்கள் அஞ்சாநெஞ்சம் கொண்டவர்களாகப் போர்க்குத் தகுதி வாய்ந்தவர்களாக இருக்கிறார்களா, ராஜபாண்டாரத்தில (கஜானுவில) போர்ச் செலவுக்கு முட்டுப்பாடின்றித் தேவையான பணம் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறதா என்னும் விஷயங்களை நன்ருக விசாரித்துத் தெரிந்து கொள்வான்.

அப்பால் ஜோதிடம் வல்லாரை அழைத்து வந்து க்ரஹ நிலை எபபடி இருக்கிறது என்பதையும் விசாரிப்பான். பழைய காலத்து அரசர்களுக்கு ஜோதிடத்திலும் சகுனத்திலும் நம்பிக்கை அதிகம். அந்தச் சாஸ்திரங்களில் வல்லவர்கள் அரசனுடன் கூடவே எப்போதும் இருப்பர். அவர்களிடம் அரசனுக்குப் பூர்ணமான நம்பிக்கை இருந்து வந்தது.

வாய்ச் சொல் கேட்பதும் மற்ருென்ருகும். இப்பழைய தமிழ் நூல்களில் விரிச்சி என்னும் வடமொழி நூல்களில் உபச்ருதி என்றும் கூறப்பட்டுள்ளது. சாதாரணமாக இரண்டு பேர் பேசிக்கொண்டிருக்கும்போது அவர்கள் வாயினின்றும் வெளிபடும் சொற்களைக் கொண்டு, அவற்றின் போக்கை அனுசரித்து, தங்கள் எண்ணம் நிறைவேறுமா என்பதை அறிந்து கொள்வர்.

ஒரு கர்ண பரம்பரைக் கதை

கிருஷ்ண தேவராயர் கலிங்கத்தின் மீது படையெடுத்துச் செல்வதற்குமுன் இவ்விதம் உபச்ருதியைக் கேட்கத் தம் மந்திரி அப்பாஜியை வெளியே அனுப்பி வைத்தார். அவர் விடியற்காலம் நகரத்தைச் சுற்றி வரும்போது ஒரு வண்ணுன் வீட்டுச் சமீபம் வந்தார். அவன் விடியற்காலையில் துணிகளைத் தோய்ப்பதில் ஈடுபட்டிருந்தான். வேலையின் களைப்புத் தோன்ருமலிருக்க அவன் பாடிக்கொண்டிருந்தான் அப்பாஜி அங்கே வந்த சமயம். அவன்,

"கொண்ட வீடு மனதோர்
கொண்ட பல்லே மனதோர்
காதனி எவ்வரு வாதுக்கு
வச்சின
கடகமு தாகா மனதோர்
(கொண்ட வீடு நம்மதடா
கொண்ட பள்ளி நம்மதடா
இல்லையென்று வெல்வது
வாதுக்கு வந்தால்
கடகம் வரையில் நம்மதடா)"

என்னும் பாட்டைப் பாடிக்கொண்டிருந்தான். இதைக் கேட்ட அப்பாஜி தம்முடைய காரியம் வெற்றி பெறுமு எண்ணிக்கொண்டார்? இவ்விதம் கூறுகிறது கர்ண பரம்பரைக் கதை ஒன்று.

பிற நாட்டின் மீது படை எடுத்துச்செல்வது நிச்சயமான பிறகு, அதை எபபொழுது, எங்கிருந்து, எப்படி நடத்துவது என்பது ஆலோசிக்கப்படும். எந்த அரசனும் விரோதியின் நாட்டுக்குள் தானே நேரில் செல்லக் கூடாது என்று ராஜ தர்மம் கூறுகிறது. அதனுல் பொதுவாக இந்தப்படையெடுப்புகளை அரசனே நேரில் இருந்து நடத்துவதில்லை. அரசனுக்குப் பதிலாகத் தண்டநாயகனே சேனைக்குத் தலைமை பூண்டு நின்று யுத்தத்தை நடத்தி வெற்றிகொள்வான். அரசர்கள் வீணுகத் தங்களை ஆபத்துக்கு உள்ளாக்கிக்கொள்ளக்கூடாது. தண்ட நாயகர்களுள் ஒருவருக்குப் பின் மற்ருெருவர் தலைமை ஏற்கலாம்: அரசர் விஷயம் அவ்விதம் அன்று.

அரசன் நேரில் போகலாமா?

ஆயினும் பல சமயங்களில் அரசர்களே நேரில் சென்று யுத்தத்தை நடத்தி இருக்கிருர்கள். கிருஷ்ண தேவராயர் தாம் எழுதிய "ஆமுக்த மால்யதா" என்னும் நூலில் அரசர்கள் யுத்த களத்துக்கு நேரில் செல்லக்கூடாது என்றே கூறியிருந்தாலும், அவர் நிகழ்த்திய போர்களில் அவரே நேரில் சென்றிருக்கிருர். 'அரசனில்லாத யுத்தத்தில் வெற்றி கிட்டாது' என்றே நினைத்து அவருக்குப் பின்வந்தோர் பலரும் அவ்விதமே செய்திருக்கிருர்கள்.

பொதுவாகப் போர் தொடுப்பது நிச்சயமானவுடன் அதை நடத்தி வைக்க, தண்ட நாயகனையும் நியமித்து விடுவார்கள். ஒவ்வொரு அதிகாரியின் தகுதியையும் திறமையையும் சீர்தூக்கிப் பார்த்து அதனை வெற்றிகரமாக முடிக்கும் சக்தி வாய்ந்தவனுக்கே அந்தப் பதவி அளிக்கப்படும். பல சமயங்களில் சாமர்த்தியம் வாய்ந்த வீரவாலிபர்கள் தைரியமாக முன் வந்து அந்தக் கட்டளையைத் தங்களுக்கு இட வேண்டும் என்பதும் உண்டு. அப்படி அளிக்கப்பட்டவற்றை வெற்றிகரமாக முடித்து முன்னேறியவர் பலரைப்பற்றி நாம் சரித்திரத்திலே வாசித்திருக்கிறோம் மதுரையில் நாய்க்க வம்சத்தை ஸ்தாபித்த விசுவநாத நாயக்கரைப் பற்றி அவ்விதம் கூறப்படும் கதையை யாவரும் அறிவர்.

படைத்தலைமை பூணப் பொறுக்கி எடுத்த அதிகாரிக்கு அரசனே தன் கையால் தாம்பூலம் வழங்கும் சம்பிரதாயம் ஒன்று உண்டு. யுத்தம் நிச்சயம் என்று தீர்மானமாகி விட்டால் அரசன் ஸேனுபதிகளுக்கும் போர்வீரர்களுக்கும் வேண்டிய பரிசுகளை வழங்குவான். இது அவர்கள் மனத்தைத் திருபதி செய்து, அவர்களை அரசனிடம் பரமவிசுவாசம் உள்ளவர்களாகச் செய்யும். அதனுடன் படைத்தலைவனுக்காகத் தனி மரியாதையும் செய்யப்படும். அதுவே அரசன் சபை நடுவே அவனுக்குத் தாம்பூலம் வழங்குவது: அத்தகைய பெருமை யாவருக்கும் எளிதில் கிட்டி விடாதது.

அதற்குப் பிறகே இந்தச் செய்தி நாட்டிலும் நகரத்திலும் தண்டோராப் போட்டுப் பிரகடனம் செய்யப்படும்.

இந்தத் தொகுதியில் முந்திய இரண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஜுன் 28-ம் தேதி ஜுலை 5-ம் தேதி "மித்திரன்" வாரப்பதிப்பு இதழ்களில் வெளியாகியிருக்கின்றன.

அட்டைப் படம்

பிரிட்டிஷ் யுத்த மந்திரி சபை, பஸிபிக் யுத்த சபை இவற்றின் அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கும் கனம் திவான் பஹதூர் ஸர் எ. ராமஸாமி முதலியார் கே.ஸி.எஸ்.ஐ.

இலவசம்! இலவசம்!! இலவசம்!!!



படத்திலுள்ளதுபோன்ற அமைப்பு. உண்மை ரிவால்வரைப்போலிருப்பதுடன 15 அவு. எடை 7" நீளம். 6 ரவைகளை சேர்ந்தாற்போல சுடலாம். இதன் சபதத்தால் அனைவரையும் விரட்டலாம். திருடர்கள் விரோதிகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள சிறந்தது. நெ. 7777, 30 ரவைகளுடன் ரூ. 4/8 நெ. 8888, 45 ரவைகளுடன் ரூ. 5/13 நெ. 1111 55 ரவைகளுடன ரூ. 6/12 அதிகப்படி 1000 ரவைகள் ரூ. 3/- பெல்ட்டுடன் கேஸ். ரூ. 1/8. பிஸ்டல ஆயில அணு 6. இலவசம்: ஒரு அழகிய மியூட் கை கடியாரம், ஒரு தோலா "பாரிஸ் நியூ கோல்ட்" ஒவ்வொரு பிஸ்டலுடனும இனுமாகக் கொடுக்கப்படும். இவை உண்மை தங்கத்தைப்போலிருப்பதுமட்டுமின்றி, கம்பிகளாகவும் இழுக்கலாம், பிளேட்டுகளாகவும் அடிக்கலாம், எல்லாவித நகைகளும் செய்யலாம். குறிப்பு:—அங்கீகரிக்கப்படாவிடில் பணம் வாபீஸ் என்ற உத்தரவாதத்தினமேல் விற்கப்படுவன. 2 பிஸ்டல் வாங்குவோருக்கு 2 அழகிய மியூட் கை கடியாரமும் 2 தோலா "பாரீஸ் நியூ கோல்ட்"டும கொடுக்கப்படும். தபால் சார்ஜ் இலவசம.

இந்தக் குறைந்த கட்டணங்கள் வாபீஸ் பெறுமுன எழுதுங்கள்.

AMERICAN PISTOL SUPPLIERS

(E. A. B.) (S.M.M) Ravi Road, LAHORE

சித்திரமும் சிருங்காரமும்

'மேஜர் பார்பரா'

ஜார்ஜ் பெர்னுர்ட் ஷா என்ற பிரபல பிரிட்டிஷ் நாடகாசிரியர் எழுதிய நாடகங்களுள் "மேஜர் பார்பரா" என்பது பிரசித்தி பெற்றது. ஷா நாடகங்கள் இப்போது படம் பிடிக்கப்பட்டு வருகின்றன. முதன் முதலில் "பிக்மலியான்" என்ற நாடகம் படம் பிடிக்கப்பட்டது: படத்தைப் பார்த்துப் பலர் மகிழ்ந்தனர்.

"மேஜர் பார்பரா" நாடகத்தின் கதைச் சுருக்கம் பின்வருமாறு:—அடால்பஸ் குஸின்ஸ் என்பவர் ஒரு போதகாசிரியர். ஒரு நாள் பொழுது போகவில்லையாதலால், அவர் லைம் ஹவுஸில் ரக்ஷண்ய சேனையார் நடத்திய ஒரு தெருக்கூட்டத்திற்குப் போனுர். வேடிக்கையாகப் போன அவர், அங்கு வந்திருந்த ரக்ஷண்யப் படைத் தலைவியான பார்பரா அண்டர்ஷாப்ட் என்பவளிடம் காதல் கொள்கிருர். பார்பரா நல்ல ரூபவதி: பார்ப்பதற்கு மனோஹரமானவள். தான் அநேக பாபங்கள் செய்திருப்பதாகவும், அவற்றிற்குத் தான் மிகவும் துக்கிப்பதாகவும் கூறிக் கொண்டு அவர் அவளை அண்டுகிருர். பார்பராவும் அவரிடம் ஆகர்ஷிக்கப்படுகிருள்: ஆசிரியரின் துடுக்கை யடக்கி, அவரது அகம்பாவத்தை ஒடுக்கி, அவரது ஆத்மாவுக்குத் திருப்தி ஏற்படும் வகையைத் தேட பார்பரா தன் உள்ளத்தே நிச்சயிக்கிருள்.

அவரைத் தன் வீட்டிற்கும் அவள் அழைத்துக் கொண்டு போகிருள்: அப்போது தான் அவருக்கு, வெடி மருந்துகளைத் தயாரிக்கும் ஆண்ட்ரூ அண்டர்ஷாப்ட் என்ற பிரபலஸ்தரின் புத்திரி அவள் என்பது தெரிய வருகிறது: பார்பராவின் அருகிலேயே இருக்க விருப்பம் கொண்டவராகி அவர், ரக்ஷண்யப் படையில் சேர்ந்து விடுகிருர். இதற்கு சில மாதங்களுக்குப் பின்பு இருவரும் ஒருவரையொருவர் மணக்க முடிவு செய்கின்றனர்: ஆனல் அவரது பாவத்திற்குப் பிராயச் சித்தம் மட்டும் கிடைத்தபாடில்லை. இவ்விருவரும் செய்து கொண்ட முடிவு பார்பராவின் தாயாரான லேடி ப்ரிடோமார்டுக்குக் கோபத்தை மூட்டுகிறது. ஒரு புறம் பார்பரா ரக்ஷண்ய சேனையில் சேர்ந்து கொண்டு ஆஸ்தியில்லாத ஒருவனை மணக்க நிச்சயித்தது, மற்றொரு புறம் இன்னொரு புத்திரியான ஸாராவும் ஆஸ்தி சிறிதுமில்லாத சார்லஸ் லெனக்ஸ் என்பவனை மணம் புரியத் தீர்மானித்திருந்தது—இவை லேடி ப்ரிடோமார்டினல் சஹிக்க முடியாமல் இருக்கின்றன.

இந்த நிலையில் அவளது புத்திரனை ஸ்டீபன் தன் தகப்பனரின் தொழில் விஷயத்தில் சிரத்தை காட்டாமல் அலக்ஷியமாயிருப்பதும் லேடி ப்ரிடோமார்டின் உள்ளத்தை மிகவும் உருத்துகிறது. தாயாருக்குத் தன் பிள்ளை தகப்பனரின் தொழிலை மேற்கொண்டு நடத்த வேண்டும் என்ற ஆவல் தான் எப்போதும்! லேடி ப்ரிடோமார்ட் தனது கணவனைவிட்டுப் பிரிந்து பல வருஷங்களாகி விட்டபடியால், அவள் ஆண்ட்ருவைத் தன் வீட்டிற்கு வந்து தன் பிள்ளையையும் பெண்களையும் பார்த்துவிட்டுப் போகும்படி அழைக்கிருள்.

ஆண்ட்ரூ இந்த அழைப்புக்கிணங்கி வருகிருர். அப்போது அவர் தமது மனைவியிடம், தமது வெடி மருந்து உற்பத்திசாலையை புதிதாய்க் கண்டெடுக்கப்பட்ட ஒரு அனுதைதான் திறம்பட நிர்வகிக்க முடியும் என்ற ரகசியத்தை எடுத்துச்சொல்கிருர். அவருக்கு மறுபடியும் தம் மனைவி மக்களுடன் சேருவது மிகுந்த சந்தோஷத்தைத் தருகிறது: பார்பராவின் கொள்கையும் போக்கும் அவர் கொண்டவற்றிற்கு முரண்பட்டனவாக இருந்தபோதிலும், அவருக்கு அவளிடம் அலாதி ப்ரீதி உதயமாகிறது. ஆண்ட்ரூ அண்டர் ஷாப்டுக்கு தமது பண பலமே பெரிது: ஆனல் பார்பராவுக்குத் தனது படை பலமே பெரிது. கடைசியில் இருவருக்கும் ஒரு விதமான சமரஸம் ஏற்படுகிறது—அதாவது அண்டர் ஷாப்ட் ரக்ஷண்ய படை ஸ்தலத்திற்கு விஜயம் செய்ய வேண்டும்: இதற்கப்புறம் பார்பரா அவரது தொழிற்சாலையைப் போய்ப் பார்க்க வேண்டும் என்பதே அந்த ஒப்பந்தம்.

தாம் அளித்த வாக்குப் பிரகாரம், மறுநாள் அண்டர் ஷாப்ட் பார்பராவின் படையைப் பார்க்கப்போகிருர்; அங்கு பில் வாக்கர் என்பவன் ஒரு ஸ்திரீ ஸேவிகையைத்தாக்குவதும், பார்பரா தனது திறமையினல் அவன் நியாயத்தையும் நீதியையும் உணரும்படிச் செய்வதையும் அவர் நேரில் காண்கிருர். உடனே அவர் பார்பராவிடம் 50,000 பவுன் நன்கொடையாகத் தருகிருர்: இதற்குச் சற்று முன்பு தான் பில் வாக்கர் அளித்த ஒரு பவுன் நன்கொடையை பார்பரா ஸ்வீகரிக்க மறுத்து விட்டார். இதனல் பில் கோபமடைந்து வெளியே போகிறன்: தகப்பனும் போய் விடுகிருர். தனது காதலனையும் காணவில்லை. கடைசியில் பார்பரா மிகுந்த ஏமாற்றம் அடைந்தவளாய் சுயேச்சையுடன் வெளிக் கிளம்புகிருள். அப்போது இரவு நேரம்! இதற்கிடையில் அண்டர்ஷாப்டுக்கும் குயின்ஸுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுகிறது; பார்பராவின் காதலன் நல்ல புத்திசாலி என்பதை அவர் கண்டு கொள்கிருர்.

மறுநாள் குடும்பத்தார் யாவரும் அண்டர் ஷாப்டின் தொழிற்சாலையைப் பார்வையிடப் போகின்றனர். அங்கு எல்லாம் அல்லோல கல்லோலமாய் இருக்குமென்று அவர்கள் எதிர் பார்த்தனர்: அங்கிருந்த தொழிலாளர் யாவரும் தங்கள் குடும்பங்களுடன் திருப்தியாகவும் சந்தோஷமாகவும் வாழ்வதைப் பார்த்தவுடன் அவர்கள் அதிக ஆச்சரியமடைகின்றனர். மனக் கிலேச முற்ற பார்பரா கூட அங்கு திருப்தி நிலவுவதாகவும் நட்புக் கொள்கிருர்.

தொழிற்சாலை முழுவதையும் சுற்றிப் பார்த்தபின்பு அண்டர்ஷாப்ட், தமக்கப்புறம் இதை நிர்வகிக்க வல்ல வார்சு தமக்குக் கிடைக்கவில்லையென்றும், ஆசிரியர் குஸின்ஸ் மட்டும் ஒரு அநாதையாக இருப்பாரேயானல் அவர் தமக்கப்புறம் தமது ஸ்தானத்தை ஸ்வீகரிக்க முடியும் என்றும் கூறுகிருர். குஸின்ஸ் உடனே முன் வந்து, ஒரு விதத்தில் தம்மை அநாதை என்று தான் கருத வேண்டும் என்றும், காரணம் தமது பெற்ருேர்களின் விவாகம் இங்கிலாந்து சட்டப்படி ஒப்புக்கொள்ளப்படாதது என்றும் கூறுகிறன் கடைசியில் குஸின்ஸ் அண்டர்ஷாப்ட் கூறியதை ஆதரிக்கிறன்: பணமும் வெடிமருந்தும், ரக்ஷண்ய சேனையார் போலவே எத்தகைய் தீமையையும் தடுக்க இயலும் என்பதை அவன் ஒப்புக்கொண்டு, அவன் அண்டர் ஷாப்டின் வார்ஸாக மாறிவிடுகிறன்.

இதற்கப்புறம் குஸின்ஸ் பார்பராவை அண்டுகிறன். அவனை அவள் மணப்பாளா? இவ்விருவரும் சம்பாஷித்துக்கொண்டே இருக்கும்போது, கீழே தெருவில் பில் வாக்கர் மன அமைதியுடன் வேலைசெய்வதைப்பார்க்கிருள். தன் தகப்பனர் காட்டிய வழி தான் பயன் அளித்தது என்பதையும், தான் தொடர்ந்த மார்க்கம் திருப்திதரவில்லை என்பதையும் அவள் உணர்கிருள். ஆகவே தனது காதலனின் கையை இறுகப் பிடித்துக் கொண்டு, அவள் கிராம வாழ்க்கையை ஏற்கக்கிளம்புகிருள்.

இந்த யுனைடட் ஆர்டிஸ்ட் படம் எல்பின்ஸ்டனில் இவ்வாரம் காட்டப்படுகிறது.



ஜப்பானில் யுத்தகாலத்திற்கான ஆடை

ஜப்பானில் யுத்தகாலத்திற்கு ஏற்ற ஆடை சிபார்சு செய்யப்படுகின்றன. இந்தப் படத்தில் கண்ணியமும் கௌரவமும் மிகுந்த ஸ்திரீகள் எத்தகைய ஆடையை அணிவது உசிதம் என்பது காட்டப்பட்டிருக்கிறது. (இடது) உல்லாஸ வேளையில் அணிவது (மத்தி) அபாயகாலத்திற்கானது. (வலது) பொழுதுபோக்கு நேரத்திற் கேற்றது.

சிறுவர் கதை

★

அசத்தியம்

★

ஆர். மருதப்பா

சிவநேசபுரி என்று ஒரு ஊர். அந்த ஊருக்குக் கோடியில் சிவன் கோயில் ஒன்றிருந்தது. அதற்கு எதிரில் ஒரு சின்ன குடிசை. அதில் சிவபக்தர் என்று ஒருவர் வசித்து வந்தார். அவர் பரம ஸாது. தெய்வ பக்தி நிறைந்தவர். அவருக்கு பத்து வயது குமாரனைத் தவிர வேறு சுற்றத்தாரே கிடையாது. அவர் பிரதி தினமும் காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சிவ பிரானை தரிசனம் செய்து பிறகு தன் குமாரனுடன் ஊருக்குள் சென்று உஞ்ஜிவ்ருத்தி எடுத்துத் தன் வாழ்க்கையை நடத்தி வந்தார்.

சிவபக்தரின் பக்தியைக் கண்டு அவர் பால் இரக்கங் கொண்ட சிவபெருமான் ஒரு நாள் இரவு அவர் கனவில் தோன்றி, குடிசைக்குள் சிறிய பேழையொன்றை வைத்திருப்பதாயும் அந்தப் பேழையை வைத்து பஞ்சாக்ஷர மந்திரத்தை உச்சரித்தால் அதில் தங்கம் சொறியும் என்றும் சொல்லி மறைந்தார்.

அதைக் கேட்ட சிவபக்தர் திடுக்கிட்டெழுந்துப் பார்க்க, ஒரு பேழை இருக்கக் கண்டு சந்தோஷங் கொண்டார்.

மறு நாள் வழக்கப்படி காலை கடன்களை முடித்துக்கொண்டு பேழையை வைத்து பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபித்து, பிறகு பேழையைத் திறந்து பார்க்க அதில் புளியங்கொட்டை பருமன் தங்கம் இருந்தது. அதை எடுத்துக்கொண்டு கடை வீதிக்குச் சென்று தனக்கு அதிக பழக்கமானவரும் ஏழையுமான ஒரு மளிகை கடைச் செட்டியாரிடம் அந்த தங்கத்தைக் கொடுத்து தனக்கு அன்றைக்கு வேண்டிய அரிசி பருப்பு மற்றும் வேண்டிய சாமான்களை மட்டும் வாங்கிக்கொண்டு போய் சமைத்து தானும் தன் குமாரனும் சாப்பிட்டு சில பரதேசிகளுக்கும் அன்னம் படைத்தார்.

சில நாளைக்குப் பிறகு சிவபக்தருக்கு காசி யாத்திரை போக வேண்டுமென்று எண்ணம் உதித்தது. தங்கம் சொறியும் பேழையை எடுத்துக் கொண்டு போய் கடைக்கார செட்டியாரிடம் கொடுத்து "செட்டியாரே! அடியேன் காசி யாத்திரை போக வேண்டும். ஆதலால் இந்தப் பேழையை வைத்துக்கொண்டு கொஞ்சம் பணம் கொடுத்தால், நான் கூடிய சீக்கிரத்தில் பணத்தைக் கொடுத்து பேழையை மீட்டுக் கொள்ளுகிறேன்" என்ருர்.

செட்டியார் உள்ளூர சந்தோஷங் கொண்டு, "அதற்கென்ன ஸ்வாமி! எவ்வளவு பணம் வேண்டுமானலும் தருகிறேன். இதில் தங்கம் எப்படி சொறிகிறதென்று அறிய ஆவலாக இருக்கிறது" என்ருர்.

கள்ளங்கபடமற்ற சிவபக்தர், அதன் ரகஸியத்தைச் சொல்லிவிட்டுத் தனக்கு வேண்டிய பணத்தை வாங்கிக்கொண்டு தன் குமாரனுடன் காசி யாத்திரைக்குபுறப்பட்டார்

செட்டியார் மறு நாளே கடையை எடுத்துவிட்டு, நினைத்த போதெல்லாம் பஞ்சாக்ஷரம் மந்திரத்தை ஜபித்து கொஞ்ச நாளைக்கெல்லாம் லக்ஷாதிபதியாகி ஆனந்தமாய் இருந்து வந்தார்.

காசியாத்திரை சென்ற சிவபக்தர் கொஞ்ச நாளைக்குப் பிறகு பணத்துடன் ஊர் வந்து சேர்ந்தார். செட்டியார் கடை மூடிகிடந்தது. பக்கத்தில் உள்ளவர்களிடம் அவர் இருப்பிடத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டு போய் செட்டியாரைக் கண்டு நமஸ்கரித்து, "ஐயா! உமது தயவால் அடியேன் அநேக க்ஷேத்திரங்களைத் தரிசித்து வந்தேன்" என்று சொல்லி பணத்தைக் கொடுத்தார்.

செட்டியார் பணத்தை எண்ணிக் கொண்டுதான் முன்னதாகவே தங்கம் சொறியும் பேழையைப் போல் தயார் செய்து வைத்திருந்த வேறொரு பேழையை கொடுத்தனுப்பினர்.

சிவபக்தர் தன் குடிசைக்குச் சென்று பேழையை வைத்து பஞ்சாக்ஷரத்தை ஜபித்தார். தங்கம் சொறிய வில்லை. திடுக்கிட்டு ஓடோடியும் செட்டியாரிடம் சென்று "செட்டியாரே! இந்த பேழை தங்கம் சொறிய வில்லையே" என்ருர்.

"தங்கம் சொறியுமோ, சொறியாதோ அதெல்லாம் எனக்கு தெரியாது. நீர் கொடுத்து விட்டுப் போன பேழையைத் திருப்பிக் கொடுத்து விட்டேன்" என்ருர் செட்டியார்.

சண்டை வலுத்தது. இருவரும் நீதிபதியிடம் சென்ருர்கள்.

"செட்டியாரே, சிவபக்தர் பொய் சொல்லாதவர். அவர் சொல்வது உண்மை என்று எனக்கு தோன்றுகிறது" என்ருர் நீதிபதி.

"ஐயா! நான் ஆணையிட்டு சொல்லுகிறேன். இவர் கொடுத்தது இந்த பேழை தான்" என்ருர் செட்டியார்.

"நான் கொடுத்தது தங்கம் சொறியும் பேழை. இது சாதா பேழையாக இருக்கிறது. என் பிள்ளை மீது ஆணையாக இது என்னுடையதல்ல" என்ருர் சிவபக்தர். உடனே பக்தரின் பிள்ளை தரையில் விழுந்து இறந்தது.

அதைக்கண்ட நீதிபதி பக்தரே பொய் சத்தியத்தின்பலனை அனுபவித்து விட்டீர். இனி என் முன் நிற்காதே" என்ருர்.

சிவபக்தர் இறந்த தன் குமாரனை தூக்கிக்கொண்டு கவலையுடன் தன் குடிசைக்குப்போய்சேர்ந்தார். அன்றிரவு சிவபெருமான் பக்தரின் கனவில் தோன்றி, "பக்தா! உலகம் அசத்தியத்தில் மூழ்கியிருக்கிறது. நீ நீதிபதியிடம் சென்று இரண்டுபேழை கொடுத்ததாகச் சொல். அப்பொழுதுதான் உன் பிள்ளையும் பிழைக்கும், பேழையும் கிடைக்கும்" என்று சொல்லி மறைந்தார்.

மறு நாள் பக்தர் நீதிபதியிடம் சென்று, "ஐயா! நான் செட்டியாரிடம் இரண்டு பேழை கொடுத்தேன். ஒன்று தங்கம் சொறியும் பேழை, மற்றொன்று சாதா பேழை, அவர் சாதா பேழையைத் தான் கொடுத்தார். தங்கம் சொறியும் பேழையைக் கொடுக்கவில்லை. இது முழுதும் உண்மை என் பிள்ளை மீது ஆணையாக சொல்லுகிறேன்" என்ருர். பிள்ளை உயிர் பெற்றெழுந்தது. அதைக் கண்ட நீதிபதி சந்தோஷமடைந்து, பக்தருடன் செட்டியார் மாளிகைக்குச் சென்று சோதனையிட்டுப் பார்க்க தங்கம் சொறியும் பேழை கிடைத்தது. அதை பக்தரிடம் கொடுத்து, அவரை அனுப்பி விட்டு செட்டியார் சொத்து முழுவதையும் பறிமுதல் செய்துவிட்டார். லக்ஷாதிபதியாய் இருந்த செட்டியார் பிக்ஷாதிபதியாய் ஆனர்.

வாரா வாரம் உங்கள் கேசத்தை சீர்படுத்தும் முறைகள்

ஆடவர்களே, நீங்கள் அறியவேண்டிய முக்கியமான ஒரு விஷயம்

1 டாம்கோ தேங்கா யெண்ணெய் ஷாம்பூ ஒருபுட்டி வாங்கவும். (விலை சொற்பம் தான் - இன்றே வாங்குங்கள்.)

2 கூந்தலை (ஜலத்தில்) நனையுங்கள்.

3 ஷாம்பூவை தாராளமாக உபயோகித்து நிறைய நுரை வருமளவு தேய்க்கவும். பிறகு சுத்த ஜலம் விட்டு கூந்தலை அலசி உலர்த்துங்கள்.

4 சீப்பும் பிரஷ்ஷும் கொண்டு வாரி மினுக்கவும். இப்பொழுது உங்கள் கூந்தலின் அழகிய தோற்றத்தைக் கண்டு நீங்களே வியப்புறுவீர்கள்.

டாம்கோ தேங்காயெண்ணெய் ஷாம்பூ உங்கள் கேசத்தை மிருதுவாகவும், உறுதியாகவும், பள பளப்பாகவும் இருக்கச் செய்கிறது. எப்பொழுதும் அதையே உபயோகியுங்கள் எல்லா பிரபல கடைகளிலும் கிடைக்கும்.

டாம்கோ தேங்கா யெண்ணெய் ஷாம்பூ



A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா, 1, வாரன் ரோட், பீமன்பேட், மைலாப்பூர், மதராஸ்.

தயாரிப்போர் :- தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமி. டாடாபுரம் & பம்பாய்.

TH. 2363.